பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 152

ஞாயிற்றுக்கிழமை
27 ஏப்ரல் 2025

சித்திரை 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## உயர்தரப் பெறுபேறு வெளியானது நேற்று

யாழ்ப்பாணம், ஏப். 27
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று மாலை வெளியிடப்பட்டன. 2024ஆம் ஆண்டுக்கான உயர் தரப் பரீட்சை கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் கடந்த டிசெம்பர் மாதம் 14

# தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்து வரலாற்றுத் தவறை இழைக்காதீர்!

## முன்னாள் எம்.பி. சித்தார்த்தன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப்ரல் 27**
**நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.யைத் தெரிவுசெய்தமைக்காக பலர் தற்போது வருத்தப்படுகின்றனர். எனவே, அவ்வாறான தவறை மீண்டும் செய்யவேண்டாம் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவித்தார்.** 14

## தீர்வை வலியுறுத்துவதற்காக தமிழரசைப் பலப்படுத்துங்கள்

### சாணக்கியன் எம்.பி. அழைப்பு

மன்னார், ஏப். 27
தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியற் தீர்வொன்று தேவை என்ற தகவலை நாங்கள் வலுவாக வெளிப்படுத்துவதற்கு, உள்ளூராட்சித் தேர்தலைச் சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தவேண்டும் 14

## யாழ். இந்துக் கல்லூரியில் 55 மாணவர்களுக்கு 3ஏ!

யாழ்ப்பாணம், ஏப். 27
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 55 மாணவர்கள் 3ஏ பெறுபேற்றைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர் என்று பாடசாலை நிர்வாகம் 14

## அனைத்து மக்களுக்கும் சமவுரிமை வழங்குவோம்

### ஜனாதிபதி கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 27
இலங்கையில் அனைத்து இன மக்களாலும் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமாக எமது அரசாங்கம் மட்டுமே காணப்படுகின்றது. ஆதலால், நாங்கள் அனைத்து மக்களுக்குமான சம உரிமைகளை உறுதிப் 14

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

## 6 மாணவர்களுக்கு மருத்துவத்துறை!


முல்லைத்தீவு, ஏப். 27
முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 அல்லது 7 மாணவர்கள் மருத்துவத் துறைக்குத் தெரிவுசெய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தெரியவருகின்றது. 14

## உரிமையைக் கேட்பது இனவாதமெனில் அதனைச் செய்வதற்குப் பின்னிற்கோம்!

### அமைச்சர் பிமலுக்கு செல்வம் எம்.பி. பதிலடி

வவுனியா, ஏப். 26
தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுப்பது இனவாதம் என்றால், அந்த இனவாதத்தைச் செய்வதற்கு நாங்கள் ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் 14

முச்சந்தி முராரி



'படிப்புத்தான் இப்ப எங்களிட்ட இருக்கிற ஒரே ஆயுதம் கண்டியளோ'

## பாப்பரசரின் புகழுடல் நல்லடக்கம்!

உரோம், ஏப். 27
பாப்பரசர் பிரான்சிஸின் புகழுடல், பல்லாயிரம் மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. வத்திக்கான் புனித சென். 14

### மன்னார் நீதிமன்ற வளாக

## இரட்டைக்கொலை: சந்தேகநபர் கைது

மன்னார், ஏப். 27
மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாக, கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் 14

### மருத்துவர் யமுனாநந்தாவின்

## இரட்டைப் புதல்வர்கள் உயிரியலில் சாதனை!

### இருவரும் இந்துக் கல்லூரி மாணவர்கள்



யாழ்., ஏப். 27
2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் 14

## ஹாட்லிக் கல்லூரி மாணவன் கணிதப் பிரிவில் முதலிடம்!

யாழ்ப்பாணம், ஏப். 27
யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி மாணவனுக்கு கணிதப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் கிடைத்துள்ளது. 14

## யாழ்ப்பாணம் இந்து மாணவன் வர்த்தகத்துறையில் முதலிடம்



யாழ்ப்பாணம், ஏப். 27
உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் விஜயசுந்தரம் 14

### வவுனியா மாவட்டத்தில்

## முஸ்லிம் ம.வி. மாணவன் விஞ்ஞானப்பிரிவில் முதலிடம்

வவுனியா, ஏப். 27
உயர்தர பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மாணவன் மொகமட் முபாரக் முகமட் 14



### வவுனியா மாவட்ட ரீதியில்

## கனகராயன்குள மாணவன் கணிதப்பிரிவில் முதலிடம்



வவுனியா, ஏப். 27
வவுனியா கனகராயன்குள மகாவித்தியாலய மாணவன் கணிதப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். 14

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 26.04.2025 | திகதி 26.04.2025 | திகதி 26.04.2025 | திகதி 26.04.2025 | திகதி 26.04.2025 | திகதி 26.04.2025 | திகதி 26.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4055 | சீட்டிழுப்பு இலக்கம் 1122 | சீட்டிழுப்பு இலக்கம் 0081 | சீட்டிழுப்பு இலக்கம் 2161 | சீட்டிழுப்பு இலக்கம் 5813 | சீட்டிழுப்பு இலக்கம் 1843 | சீட்டிழுப்பு இலக்கம் 0388 |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கினம் துலாம் | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து J |
| வெற்றி இலக்கங்கள் 31 34 50 61 | வெற்றி இலக்கங்கள் 07 33 48 57 | வெற்றி இலக்கங்கள் 6 9 1 9 | சுப்பர் இலக்கம் 16 | வெற்றி இலக்கங்கள் 8 9 7 8 9 0 | வெற்றி இலக்கங்கள் 20 29 50 51 | வெற்றி இலக்கங்கள் 7 8 9 0 |
| விசேட எழுத்து I | | | வெற்றி இலக்கங்கள் 09 11 49 59 | | விசேட எழுத்து T | |

# மின்னல் தாக்கி ஒருவர் சாவு

கொழும்பு, ஏப்.27

பொலநறுவை அரலகங்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெகுலுவெல பிரதேசத்தில் வயல்வெளி ஒன்றில் மின்னல் தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அரலகங்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. (ச-இ)

காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m லும் தூரத்தில், நல்ல நீர்க்கிணறு, வருமானங்களும் கிடைக்கக்கூடியதாக உள்ளது. குடியிருப்புச்சூழல்.
5 பரப்புக் காணி.
தொடர்புகளுக்கு:-
076 755 8606, 077 638 5683
(CS/3025B) J-1

சுபிரி தன சம்பத
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை | வெற்றி வாரம் 0521
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கம் 3 0 8 7 3 2

Super Ball DLB
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2787 | ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 01 27 51 77

சனிதா DLB
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கம் 06 31 68 71 | வெற்றி வாரம் 4948

SASIRI DLB
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0670 | வெற்றி இலக்கம் 14 37 46

லக்ன ராசி DLB
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை
கும்பம் | வெற்றி இலக்கம் 01 14 38 61 | சீட்டிழுப்பு வாரம் 4499

KAPRUKA DLB
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து S | சுப்பர் இலக்கம் 02 | வெற்றி இலக்கம் 03 09 49 51 | வெற்றி வாரம் 1963

அத கோடிபதி DLB
திகதி 26.04.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கம் 01 15 38 73 | வெற்றி வாரம் 2613

# 'ஏக்கிய ராஜ்ய' முறைமையை தமிழரசுக்கட்சி ஏற்கமாட்டாது!

## சி.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

**எமது கட்சி ஒற்றையாட்சி முறைமையையோ 'ஏக்கிய ராஜ்ய' என்ற முறைமையையோ ஏற்றுக்கொள்ளமாட்டாது மட்டுமல்ல அவற்றை முழுவீச்சில் எதிர்க்கும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

'ஏக்கிய ராஜ்ய' முறைமையை இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டுவிட்டதாக அண்மைய தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் எதிர்த்தரப்பினரால் தெரிவிக்கப்படும் கருத்துத் தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி ஒற்றையாட்சியை ஆதரிக்கிறது என்னும் கருத்தை நாம் தெளிவாக மறுத்துள்ளபோதும் சிலர் பொது வெளியில் தொடர்ந்து பேசுகின்றனர்.

முதலில், ஒற்றையாட்சியை ஏனைய அரசியல் கட்சிகள் ஏற்றுநின்ற காலகட்டத்தில் அதனை மறுதலித்து சமஷ்டி முறையான அரசமைப்பை கோரி உருவாக்கப்பட்டதே , சஷ்டிக் கட்சி என்று அழைக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதை விடுத்து பொத்தம் பொதுவாக சகட்டு மேனிக்கு பேசுவது பொருத்தம் அற்றதும் அபத்தமானதுமாகும். எனவே எமது கட்சி 'ஏக்கிய ராஜ்ய " என்ற முறைமையை ஏற்றுக்கொள்ளமாட்டாது . அதனை முழுவீச்சில் எதிர்க்கும்- என்றார். (ச-20)

# தேசிய பாதுகாப்பை புறக்கணிக்கும் அரசு

## குற்றஞ்சாட்டுகின்றார் நாமல்

கொழும்பு, ஏப்.27

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரா அரசாங்கம் இவ்வாறான தீர்மானங்களை எடுக்கின்றது? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம். பொதுமக்கள் அச்சமில்லாமல் இருக்கலாம் என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் பகிரங்கமாக தற்போது துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் நடக்கின்றன. கடந்த நான்கு மாத காலப் பகுதியில் மட்டும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களால் 26 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பை உறுதி செய்துவிட்டா அரசாங்கம் இவ்வாறான தீர்மானங்களை எடுக்கின்றது? பாதாள உலகக் குழுக்களிடையிலான முரண்பாடுகள் என்று கூறி அரசாங்கம் தேசிய பாதுகாப்பை அலட்சியப்படுத்துகின்றது.

யாராக இருந்தாலும் சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்- என்றார். (எ-இ)

# தேர்தல் கடமைக்கான வளங்கள் மட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 27

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆளணி, வாகன வசதிகள் என்பன கடந்த தேர்தல்களோடு ஒப்பிடுகையில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச அதிகாரிகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட் டப்படுகின்றது.

தேவையற்ற செலவீனங்களைக் குறைத்து அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முன்வந்துள்ள நிலையியே குறித்த விடயங்களில் தாக்கம் செலுத் துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-125)

# ஊதியத்துடன் விடுமுறை தேர்தலுக்குக் கொடுங்கள்



கொழும்பு, ஏப். 27

தொழிலாளர் ஒருவர் வாக்களிப்பதற்காக விடுமுறை கோரினால், தொழிலாளருக்கு போதுமானதாகக் கருதப்படும் குறைந்தபட்சம் இரண்டு மணிநேர பணி விடுமுறையை ஊதியத்துடன் வழங்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வாக்களிப்பதற்காக அனைவருக்கும் அவர்களது நிறுவனங்கள் விடுமுறை வழங்க வேண்டும்.

இவ்வாறு வழங்கப்படும் விடுமுறை காலம், தற்காலிக தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய சிறப்பு விடுமுறையாக கருதப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மாரக்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை

- Computer Billing + Cashier
- Sales Assistant (cjtpahsu;)
- Packaging (nghjpaply;)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

(CS 3038) V-1

தொடர்பு: 077 419 5209

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல ஹொட்டலுக்கு அனுபவமுள்ள Waiter தேவை. 02 வருட அனுபவம் வரவேற்கத்தக்கது அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உங்கள் சுயவிபரக் கோவையை (CV/Bio Data) 0707896621 இலக்கத்திற்கு Whatsapp செய்யலாம்

தொடர்பு: 070 789 6621
077 173 9405

## வாகன சாரதி தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றின் நிர்வாக முகாமையாளருக்கு 40 வயதுக்கு மேற்பட்ட வாகன சாரதி தேவை.
தேவையேற்படின் தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.

**அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்பு:- 077 120 9998

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 12 . 1929

மறைவு 26 . 04 . 2025



### சோமசுந்தரம் சீவரட்ணம்

(முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர்)

யாழ் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சீவரட்ணம் அவர்கள் நேற்று (26.04.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் தங்கப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-பூங்காவனம் தம்பதியரின் மருமகனும், கருணாவதியின் அன்புக் கணவரும் இலங்கேஸ்வரி (வாசு). கனடா காலஞ்சென்ற சந்திரகாசன் (ராஜன்). மோகனகுமார் (கண்ணன்) கனடா. மணிபல்லவன் (பாபு). கனடா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினாம்பிகை. தவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தன். கமலினி. சுதாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிலோஷா (கனடா). கிஷோர் (கனடா). திவ்யன் (கனடா). விருத்திகா (கனடா). அதிசன் (கனடா). ஆருஷதின் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் 81/2 ஆஸ்பத்திரி வீதி யூனியன் ஒழுங்கை (யாழ்ப்பாணம்) அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லுண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
076 658 9931

ஆஸ்பத்திரி வீதி
யூனியன் ஒழுங்கை
(யாழ்ப்பாணம்)


கண்ணன்: +41621955[illegible]
பாபு: +4163714[illegible]

(CS 1139) V-1

# தேசிய மக்கள் சக்தியின் பரப்புரையில் குழப்பம்: ஒருவர் கைது

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தை நிறுத்துமாறு கோரிய நபரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அருகாக இடம்பெறவிருந்த பரப்புரையை நிறுத்துமாறு கோரிக் குழப்பத்தில் ஈடுபட்டவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து கைக்கோடரியும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-26)



ஸ்ரீ குருப்யோ நம:
ஸ்ரீ மாத்ரே நம:
ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

**கும்பாபிஷேக பெருவிழா**
**ஸ்ரீ பாலாம்பிகா தேவஸ்தானம்**
(வாலையம்மன் திருக்கோவில்)

ஆவர்தன பிரதிஷ்டா நவ குண்ட பக்ஷ
மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம் - 2025

| | | |
|---|---|---|
| கிரியா மங்களாரம்பம் 27.06.2025 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி | மஹாயாகாரம்பம் 04.07.2025 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி | மஹா கும்பாபிஷேகம் 07.07.2025 திங்கட்கிழமை காலை 10.15 மணி முதல் பகல் 12.00 மணிக்குள் |

04.07.2025 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதல் 05.07.2025 சனிக்கிழமை மாலை 5.00 மணி வரை அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு
"சிவாகம சிரோமணி"
சிவஸ்ரீ- சந்திர சாந்தரூப சிவாச்சாரியார்
(தேவஸ்தான பிரதம குரு)

"எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்"
ஸ்ரீ பாலாம்பிகா தேவஸ்தானம்

இலங்கை, இந்திய தலைசிறந்த அந்தண சிவாச்சாரிய பெருமக்கள் இப்பெருஞ்சாந்தியில் கலந்து சிறப்பிப்பார்கள்.

## சமூக ஊடகப் பதிவேற்றுநர்கள் தேவை

புத்தாக்க சிந்தனையுள்ளவர்களா நீங்கள்?

இது உங்களுக்கான அரிய வாய்ப்பு



சமூக ஊடகக் கணக்குகளை நிர்வகிக்கக்கூடிய புத்தாக்க சிந்தனையுள்ள பணியாளர்கள்.
சமூக ஊடகப் பதிவேற்றுநர்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புக்கு: 077 120 9998

## தரவு பேணுநர் தேவை

(Data entry operator)



யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றுக்கு கணினியில் தகவல்களைப் பேணவும், ஆவணப்படுத்தவும் பணியாளர்கள் தேவை. 35 வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். முன்னனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புக்கு: 077 120 9998

**ENGLISH LANGUAGE & LITERATURE**

For Grade 9, 10 & 11

**CAMBRIDGE CLASSES**

A1 – Movers, A2 – Flyers & Key For Schools
On Weekends ( Sat & Sun)
By Mr. Benildus Johnson B.A. Lit & M.A. TESL
ISA English -Colombo
At Ariyalai Community Centre, Ariyalai.
Classes Commence on the 10th & 11th May 2025.
Contact: 0776624500 – joravini@yahoo.com

## WE ARE HIRING!

**Marketing Promotion Officer**

WE ARE SEEKING A SKILLED IT AND MARKETING OFFICER TO JOIN OUR TEAM

- Education - Passed in A/Level (Higher Qualifications are Welcome)
- Age - Below 35 Years
- Experience - Strong IT and Marketing Knowledge

**Apply Now**

Submit your resume to imsmanipay.info@gmail.com
WhatsApp at 0760163515

Institute of Medical Sciences, Green Memorial Hospital, Manipay
021 225 6335
www.imslanka.lk

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Store Keeper | : 0777878708 |
| Sales Manager (Basic 90,000/=) | : 0779969661 |
| Branch Manager (Nursing) | : 0761407563 |
| Heavy Vehicle Driver (சாரதி) | : 0773609373 |
| Bio Medical Technician | : 0773618559 |
| Draftsman | : 0777514664 |
| Sales Rep | : 0773045177 |
| Dental Nursing Assistant Trainee | : 0767712172 |
| Labors (வேலையாட்கள்) | : 0741952751 |
| மேசன், கூலி வேலையாட்கள் | : 0770358851 |
| கிளீனிங் வேலை (பெண்கள்) | : 0761498110 |

மேலதிக யாழ், வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையக வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 074 138 3368
DEWMAS DEWMAS 51 Amman Road, Nallur

## காணி விற்பனைக்கு

கீரிமலை / கருகம்பனை நாச்சிமார் அம்பாள் கோவிலுக்கு அருகில் பனைமர காணி விற்பனைக்கு உண்டு.
வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை

071 817 5071 , 076 171 8505

## வாடகைக்குண்டு

அலுவலகங்கள் தனியார் வகுப்புக்கள் நடாத்துவதற்கு இடவசதி வாடகைக்கு உண்டு
200m From Jaffna University
500m From Northern Central Hospital

தொடர்புகளுக்கு:
திருநெல்வேலி யாழ்ப்பாணம் } 077 888 5622

## பணிப்பெண் தேவை

நன்கு சமைக்க தெரிந்த வீட்டு வேலைகளை திறம்பட செய்யக்கூடிய பணிப்பெண் தேவை
Place: Jaffna Kachcheri

தொடர்பு: 077 153 2398, 077 072 5056

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1985 இல் பிறந்த நட்சத் மகம். மணமகனுக்கு மணமகள் தேவை மணமகன் கொழும்பில் Electricin ஆக தொழில் புரிகிறார். நட்சத்திரம் மகம்

தொடர்புகளுக்கு:
075 771 8340

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டுவேலைகளை செய்தற்கு பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் தங்குமிட உணவு போக்குவரத்து வசதிகளும் உண்டு
35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 774 3185

## வீடு விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோவிலுக்கு அருகாமையில், 3 பரப்பு 4.1 குளி காணியில் அமைந்துள்ள பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

077 015 5108

## தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அரைக்கும் ஆலைக்கு அனுபவம் உள்ளவர், பழகுபவர் என்பனவற்றிற்கு ஆண்,
பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்பு: 076 297 7078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

இந்து (V) 1993 கனடாவில் பிறந்த Engineer மணமகளுக்கு பெற்றோர் வரனை தேடுகின்றனர்.(கனடா, USA) இல் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**074 075 2069**

## காணி வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் Stanly Road இல் அமைந்துள்ள Store Room உடன் கூடிய 3 1/2 பரப்புக் காணி வாடகைக்கு உண்டு.

**076 565 2122**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலியும் திவச ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பிதழும்



கடந்த 19.04.2023 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் சரவணமுத்து தங்கராஜா (வீயெஸ்ரி)**

(ஓய்வூதியர், கல்வித் திணைக்களம், முன்னாள் சிரேஸ்ட உதவி ஆசிரியர், உதயன் பத்திரிகை)

அவர்களின் இரண்டாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (07.05.2024) முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.
(CS/431) J-1 021 223 0690, 077 786 7167

## UK Immigration Consultancy

### Student Visa

- Undergraduate and PostGraduate Degrees
- No IELTS needed if you have O/L Credit Pass for English ( IELTS தேவையில்லை க.பொ.த. (சா/தர)ப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தியடைந்தால் போதுமானது )
- Places available for January intake

### Skilled Worker Visa

Only the visa application
(Visa விண்ணப்பம் மட்டும் செய்து தரப்படும்)

### UK Visa Refusals

- All types of UK visa refusals (Visit visa, Student visa, Skilled worker visa, spouse visa)
- We will introduce you to experienced lawyers based in UK to handle your.
  - Admin Review
  - Tribunal Appeal
  - Judicial Review

(அனைத்து வகையான Visa நிராகரிப்புகளுக்குமான AdminReview.Tribunal Appeal. Judiciol Review செய்து தரப்படும்)

You can meet the UK lawyers on 26 April - 1 May

Please Contact: **077 019 1110**

## நோயாளர் பராமரிப்புச் சேவைக்கான ஆட்சேர்த்தல்

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
வயது எல்லை 50 வயதிற்குட்பட்டவர்கள்
விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

**யாழ் அரசினர் பொது வைத்தியசாலை நலன்புரிச்சங்கம்
யாழ் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.**

மேலதிக தகவல்களுக்கு **076 100 0046**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் Trade First நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
கல்வித்தகமை - O/L , A/L ஆங்கிலம் , சிங்களம் பேசத்தெரிந்திருத்தல் நன்று.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆர்வமுடையவர்கள் சுயவிபரக்கோவையை Whatsapp இற்கு அனுப்பி வைக்கவும்.

**076 733 0061 , 077 780 8745**

## விலைமனு அறிவித்தல்
## கூட்டுறவு வைத்திய சாலைச்சங்கம் வ-து மூளாய்
## வைத்தியசாலை கட்டிடம் பழுதுபார்ப்பதலுக்கான கேள்விகோரல்

1. மூளாய் வைத்தியசாலையில் உள்ள தாதியர் தங்குமிட கட்டிடம் பழுது பார்த்தல்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அதற்காக இலங்கை நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள தகைமையுடைய அனுபவமுள்ள ஒப்பந்த நிறுவனங்களில் இருந்து 2025.05.15 மு.ப. 10.30 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.
2. விலைமனு ஆவணங்களை 2025.04.28 ஆம் திகதி தொடக்கம் 2025.05.14ஆம் திகதி வரை சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் மற்றும் மேல் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதி களில் மு.ப. 10.00 வரை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய், அலுவலக த்தின் நிர்வாக பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமையை பூர்த்தி செய்கின்ற. அத்தாட்சி மற்றும் மீளவிக்கப்படாத வீலைமனு ஆவணக் கட்டணம் ரூபா. 2,000.00 ஐ கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் நிர்வாக பிரிவுக்கு பணமாகச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல்.
3. கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு முன் வைத்தியசாலைக்கு வருகைதந்து குறித்த இடத்தை பரீட்சித்துப்பார்த்து கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டும். கேள்விதாரர்களால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் திருத்தங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.
4. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2025.05.14 மு.ப. 10.30க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் மூளாய். அலுவலகத்தின் நிர்வாக பிரிவில் சமர்ப்பிக்க முடியும். விலைமனுக்கள் இடும் கடித உறையின் இடது பக்க மேல் முலையில் விலைமனுவுடன் தொடர்புபட்ட ஒப்பந்த இலக்கத்தை சரியாக குறிப்பிட வேண்டும்.

   முகவரி :- கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் வ-து மூளாய்
   மூளாய், சுழிபுரம்.
   Email id: moolaii@yahoo.com
5. விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுற்ற உடன் அதாவது 2025.05.15 மு.ப. 10.30 இற்கு வைத்தியசாலை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும். விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை வைத்தியசாலையின் வசமானது.

தலைவர் / செயலாளர்
கூட்டுறவு வைத்திய சாலைச்சங்கம் வ-து மூளாய்.

(CR/4484) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## கலந்துரையாடல்



கொழும்பு, ஏப்.27

பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பட்ரிக், வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் பிரதித் தலைமை பொருளாதார நிபுணர் பெர்கஸ் கம்மிங் ஆகியோர் இலங்கையின் வேலைவாய்ப்பு அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான அனில் ஜயந்த பெர்னாண்டோவை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது இலங்கையின் எதிர்கால பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைக் கேட்டறிந்ததோடு, பிரிட்டன்-இலங்கை இடையிலான பொருளாதாரக் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தும் வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ச-41-125)

# மாமனிதர் தராகி சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ். ஊடக அமையத்தின் ஒழுங்கமைப்பில் வடக்கு - கிழக்கு மற்றும் தென்னிலங்கை ஊடக அமைப்புகள் இணைந்து நடத்தும் மாமனிதர் தராகி தர்மரட்ணம் சிவராமின் 20ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30மணியளவில் யாழ். நகரில் அமைந்துள்ள ஊடக சுதந்திரத்துக்காக உயிர்கொடுத்த ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியடியில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-41-66)

## WE ARE HIRING

Bright Nest

**Bright Nest** is an after-school enrichment program focused on improving children's spoken English and communication skills.

### DIRECTOR OF EDUCATION

Passionate educator with experience teaching children aged 6–14, ready to lead a Spoken English program that empowers primary and secondary students in underserved communities to become confident young leaders.

- 10+ years of English education experience
- Fluent in English & Tamil
- Experienced in global Spoken English methods (beyond traditional classroom teaching)
- Skilled in curriculum development and teacher training
- Creative, healthy, self-motivated, and community service-driven
- Professional and positive demeanor
- Preference will be given to candidates familiar with digital tools or online teaching platforms.

**Start Date**: Immediate
**Location**: Kantharodai
**Schedule**: Minimum 30 hours/week
**Commitment**: Must stay with our program for 2 years
**Compensation**: Starting at LKR 85,000/month (negotiable based on experience and responsibilities)

This position requires teaching a few engaging classes each week, helping students grow in confidence and fluency through fun, dynamic sessions. Help us shape the confident communicators of tomorrow!

### ENGLISH TEACHER

Join our passionate team of educators! We're looking for experienced English teachers with 5+ years of teaching experience, particularly those experienced in teaching students aged 10 to 14. If you're dedicated to nurturing confident young learners and bringing creativity into the classroom, we'd love to hear from you!

If you are interested in these positions, please send your resume with 3 professional references to gm@brightnest.org on or before May 10, 2025

**Contact**
Mr. Krishnakumar | +94 702 327 827

**Boundless Futures Foundation**
49/31, Kanthaiya Ubathiyar road, Kantharodai | www.brightnest.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரம் பேணாமை: உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஏப்.27

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்று சுகாதாரம் பேணத்தவறியமையிட்டு நீதிமன்றால் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தனிநபர் சுகாதாரம் பேணாமை, கழிவு நீரினை வெளிச்சூழலுக்கு வெளியேற்றியமை, உரிய பாதுகாப்புக்கவசம் இல்லாமல் உணவைக் கையாண்டமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கடந்த வருடம் குறித்த உணவகத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது. குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-25,26)



### ஒக்ரோபரில்

## யாழ்.மாநகரசபைக்கான புதிய கட்டடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

**யாழ்.மாநகரசபையின் புதிய கட்டடத்தொகுதியை ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி மாநகரசபைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

நகர அபிவிருத்தி, கட்டுமான மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டத்துக்கு விஜயம்செய்திருந்த நிலையில் யாழ்.மாநகரசபைக்காக அமைக்கப்படும் புதிய கட்டடத்தொகுதியைப் பார்வையிட்டார்.

இந்தக் கட்டடத்திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் விரைவாக நிறைவுசெய்யப்படவேண்டியதற்கான பணிக்கட்டளை இதன்போது வழங்கப்பட்டதுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்31 ஆம் திகதி புதிய கட்டடத்தொகுதி யாழ்.மாநகரசபையின் பாவனைக்கு வழங்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போது நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர், யாழ்.மாவட்ட ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் துறைசார் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,66)



## தமிழியல் சுவடுகள் நூல் வெளியீடு!

யாழ்ப்பாணம்,ஏப்.27

ஈழத்துத் தமிழியல் த.சண்முகசுந்தரம் தமிழியல் சுவடுகள் நூற்றாண்டு விழாக்கால நூல் வெளியீடு யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மண்டபத்தில் நடைபெற்றது. வெளியீட்டு உரையை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் ஆசிரியர் சி.ரமேஷ் ஆற்றினார். முதற்பிரதியை ச.அருள்முருகனார் வழங்கிவைக்க அதனை நிகழ்வின் தலைவர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அறிஞர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22, 27)

## சுயேச்சைக்குழு-3 ஈ.பி.டி.பி.க்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்.மாநகரசபையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கே தமது ஆதரவு என தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையிலான சுயேச்சைக் குழு-3 அறிவித்துள்ளது.

கடந்தகாலங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களை எமது பிரதேசத்துக்கு செய்ததையிட்டு டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவை வழங்கவுள்ளோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,20)



## பாசையூர் உட்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை!

### கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.27

யாழ். பாசையூரில் கடற்றொழில், விளையாட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ். பாசையூருக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கண்காணிப்புப்பயணமொன்றை அவர் மேற்கொண்டபோது பாசையூர் மீன்சந்தை, இறங்குதுறை என்பவற்றை பார்வையிட்டார்.

இதன்போது உட்கட்டமைப்பு மேம்பாடுகள் தொடர்பில் அமைச்சரிடம் மக்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், பாசையூர் சென். அன்ரனிஸ் மைதானத்தை விருத்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதியளித்தார். (ச-41-125)



## காங்கேசன்துறைவரை இனிப் பேருந்துசேவை!

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து 764, 769 வழித்தடச் சிற்றூர்திகள் காங்கேசன்துறை வரை சேவையாற்றும் என வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி பலாலி வீதி திறக்கப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கைகள் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 764 வழித்தடச் சிற்றூர்திகள் யாழ்.நகரத்திலிருந்து பலாலி வீதியூடாக காங்கேசன்துறை வரையும் 769 வழித்தடச் சிற்றூர்திகள் யாழ்.நகரத்திலிருந்து காங்கேசன்துறை வீதியூடாக காங்கேசன்துறை வரையும் சேவையாற்றும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-66)


### திருகோணமலையில்

## தமிழ்த்தேசியப் பேரவை வேட்பாளர்கள் அறிமுகம்!

திருகோணமலை, ஏப். 27

திருகோணமலை நகரசபைக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்த்தேசியப் பேரவையின் வேட்பாளர்களை அறிமுகம் செய்துவைக்கும் கூட்டம் திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலாளர் கி. ஸ்ரீபிரசாத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ. கஜேந்திரன், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் ந. ஸ்ரீகாந்தா, சமூக அரசியற்செயற்பாட்டாளர் க. அருந்தவபாலன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க. சுகாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 26 . 12 . 1952



உதிர்வு 22 . 04 . 2025

## இராசதுரை தவமணி

சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசதுரை தவமணி அவர்கள் கடந்த (22.04.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தனபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசையா இராசதுரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா - தையல்முத்து தம்பதி யரின் அன்பு மருமகளும், நாகராசா (மல்லாகம்), பூலோகராசா (கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜெயபூபதி (ஜெயா), இராஜேஸ்வரி (ராசாத்தி - கொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதாஜினி (சித்ரா - கனடா), சுகந்தன் (பிரான்ஸ்), சிவாஜினி (சுவிஸ்), அனுராதா (ஜேர்மனி), கவிதா (சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோகரன் (கனடா), தேவகி (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரபா - சுவிஸ்), விவேகானந்தன் (கண்ணன் - ஜேர்மனி), திருக்குமரன் (திரு - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற வர்களான நாகரத்தினம், செல்வராணி மற்றும் இரட்ணகுபேரன் (கனடா), இராஜசிங்கம், இராஜேந்திரன் (கனடா), காலஞ்சென்ற சற்குணம் ஆகியோரின் மைத்துனியும், மனோஜன், நபினா (கனடா), வைதேகி, யசிதா (பிரான்ஸ்), பவதாரணி, கௌதமன், அஸ்வினி (சுவிஸ்), அபிரா, சகானா, ஆத்விகன் (கிருஸ்ணா - ஜேர்மனி), ஜானகி, வினோதினி, திவ்விகன் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மகள் - திருக்குமரன் - கவிதா - 074 119 1983
தம்பி - கந்தையா நாகராசா - 077 070 5358
மகள் - கண்ணன் - ராதா - 077 937 7243

வீரபத்திரர் கோவிலடி,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

# 30ம் ஆண்டிலும் நீங்கா நினைவுகளுடன்

தோற்றம் 14 . 05 . 1948



மறைவு 29 . 04 . 1995

அமரர் **கந்தையா இராமுப்பிள்ளை**
(நெடுந்தீவு கிழக்கு 15ம் வட்டாரம்)

ஆண்டுகள் முப்பது கடந்தது

ஆனாலும் உங்கள் இழப்பின்

துயருடன்

ஆத்ம சாந்திக்காய்

பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
மகள் - வ. யாழினி

நெடுந்தீவு கிழக்கு,
15ம் வட்டாரம்.

(CS/58091) J-1

## கும்பாபிஷேகம்

மன்னார், ஏப். 27
மன்னார் திருக்கேதீச்சரம் அருள்மிகு கௌரி உடனமர் திருக்கேதீச்சர நாதர் திருக்கோயில் பரிவார வைரவரின் உற்சவ மூர்த்தி ஸ்தாபன கும்பாபிஷேகம், எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.53 மணிமுதல் 7.24 மணிவரையுள்ள சுப மூகூர்த்தத்தில் இடம் பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் விநாயகர் வழிபாடு ஜலாதிவாசம், தான்யாதிவாசம், நயலோன்மீலனம் சயநாரோகணம் முதலிய கிரியை வழிபாடுகள் நடைபெறும். 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் பகல் 12 மணிவரை பக்த பெருமக்கள் 'பாற்காப்பு' சாத்துதல் இடம்பெறும் என மன்னார் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை தெரிவித்துள்ளது.

(ச-25,60)

# மரண அறிவித்தல்



தோற்றம் 20.09.1976

மறைவு 25.04.2025

## காங்கேயன் சுரேஷ்ஜினி

(அபிவிருத்தி உத்தியோகத்தர் வலிதெற்கு பிரதேசசபை, தற்போது நல்லூர் பிரதேசசபை)

தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேயன் சுரேஷ்ஜினி அவர்கள் நேற்றுமுன்தினம் (25.04.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - தங்கராணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரட்ணதுரை - சரோஜினி தம்பதியரின் அன்பு மருமகளும், காங்கேயனின் அன்பு மனைவியும், கோகுலின் அன்புத் தாயாரும், சந்திரகாசன், சுதர்ஜினி, தர்ஜினி, பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஜிந்தினி (பிரான்ஸ்), ஜெகன், சதீஸ் (லண்டன்), தர்சினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
சந்திரகாசன் (பிரான்ஸ்) - 0033 652 634 733
தர்சினி (லண்டன்) - 0044 7951 836832
பகீரதன் (குட்டி - கொலண்ட்) - 0031 643 530 949
காங்கேயன் - 075 504 8028

44/28 செபலேன்,
தாவடி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுபோக நெற்செய்கையில் அறக்கொட்டியான் புழுத்தாக்கம்

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை



**கிளிநொச்சி, ஏப். 27**

**கிளிநொச்சியில் இந்தாண்டு விதைக்கப்பட்ட சிறுபோக நெற்செய்கை, அறக்கொட்டியான் புழுத்தாக்கத்தால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை இரணைமடுக்குளம் உள்ளிட்ட அனைத்துக் குளங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பயிர்கள் 15-25 நாள்கள் பயிர்களாக வளர்ந்துள்ள நிலையில் அறக்கொட்டியான் எனும் புழுத்தாக்கம் பயிர்களை முற்றாக அழித்துவருகின்றது.

முரசுமோட்டை, ஊரியான், பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் குறித்த புழுவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்தகாலபோகத்தின் போதும் இந்த நோய்த் தாக்கத்தால் பெரும் நஷ்டத்தைஎதிர்கொண்ட நிலையில் தற்போதும் இதன் தாக்கம் வீரியம் பெற்றுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி குறித்த நோய்த்தாக்கத்தைக் கட்டுப்படுத்தி எமது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)



# சங்கானை மருத்துவமனையூடாக பேருந்துச்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 27

சங்கானை பிரதேச மருத்துவமனையினூடாக 788 வழித்தட 3 பேருந்துகள் அண்மையில் சம்பிரதாயபூர்வமாக சேவையை ஆரம்பித்துள்ளன.

கடந்த சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சங்கானைப் பிரதேச மருத்துவமனைக்கு வருகைதரும் நோயாளர்களின் நலன்கருதி மருத்துவமனையூடாக பேருந்துச் சேவைகளை முன்னெடுக்குமாறு மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தநிலையிலேயே 788 வழித்தட தனியார் பேருந்து சேவையிலுள்ள மூன்று பேருந்துகள் தமது சேவையை குறித்த மருத்துவமனையூடாக மேற்கொள்ளவுள்ளன.

இதன்மூலம் சங்கானைப் பிரதேச மருத்துவமனைக்குச் செல்லும் பல தரப்பினரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125)

# பிள்ளையான் கைதினூடாக நாடகமாடுகிறது அரசாங்கம்

## சுகாஷ் சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 27

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் வீச்சுப்பெற்றிருந்த காலப்பகுதியில் பிள்ளையான் என்ற பெயரை எத்தனை பேருக்குத் தெரியும். ஒரு சில இயக்கங்கள் சார்பில் அரிசிக்கும், மாவுக்கும், சீனிக்கும் பொறுப்பாகவிருந்தவர்தான் பிள்ளையான். பிள்ளையான் ஒரு செல்லாக் காசு. அப்படிப்பட்ட பிள்ளையானைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவராகக் காட்டுகின்ற நாடகத்தைத் தற்போதைய அநுர அரசு மேற்கொள்கிறது எனத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலை முன்னிட்டு தமிழ்த்தேசியப் பேரவையின் பரப்புரைக்கூட்டமும், வேட்பாளர் அறிமுகமும் கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 400 கோப்புக் கட்டுகளைத் தூக்கிவைத்து அனைத்திற்கும் நீதி பெற்றுக்கொடுப்பேன் என வாக்குறுதி வழங்கினார். இன்றுவரை நான்கு கோப்புகளுக்குக்கூட நீதி பெற்றுக்கொடுக்கப்படவில்லை. மக்கள் ஏமாந்துவிட்டார்கள்.

எதிர்வரும் உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஒரு குருசேத்திரம். ஒரு மானப்போர். உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்மக்களின் வாக்குகள் தமிழ்த்தேசியத்துக்கா? சிங்களத் தேசியத்துக்கா? எனச் சீர்தூக்கிப் பார்த்து வாக்களிக்க வேண்டும். தமிழ்த்தேசியத்தின் எதிர்கால இருப்பைத் தீர்மானிக்கும் தேர்தலாக உள்ளூராட்சிசபைத் தேர்தல் காணப்படும் நிலையில் எமது மக்கள் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுப்பார்களென நம்புகின்றோம் - என்றார். (ச-66)

# அர்ச்சுனாவுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஏப்.27

விபத்துச் சம்பவம் ஒன்றில் ஒருவரைத் தாக்கிக் காயங்களை ஏற்படுத்தியமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா வழக்கு விசாரணைகளை எதிர்கொள்ளும் நிலையில், அவர் நீதிமன்றில் முன்னிலையாகவேண்டும் என்று கொழும்பு மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா நீதிமன்றில் முன்னிலையாகவேண்டும் என்று கடந்த செவ்வாக்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர், 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி கொழும்பு, பேஸ்லைன் வீதியில் ஒரு கார் விபத்தை ஏற்படுத்தி, வாகனத்தில் இருந்தவருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்தினார் என்று கிராண்ட்பாஸ் பொலிஸாரால் தாக்கல்செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலையாகும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. (எ-இ)

# பூபதியின் நினைவேந்தல் பிரிட்டனில் உணர்வுபூர்வம்

பிரிட்டன், ஏப்.27

தியாகதீபம் அன்னை பூபதியின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பிரிட்டனில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

தமிழீழ சுயநிர்ணய அமைப்பு மற்றும் ஏனைய பிரிட்டன் தமிழ் அமைப்புகளினதும் ஒருங்கிணைப்பில், பிரிட்டன் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக கடந்த சனிக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த்தேசிய ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டு தியாகதீபம் அன்னை பூபதியின் உருவப்படத்துக்கு மலர்தூவியும், விளக்கேற்றியும் நினைவேந்தினர். தொடர்ந்து அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (எ-25,125)

# தே.மக்கள் சக்திக்கு வாக்களித்தால் திட்டங்களுக்கு உயிர்கொடுப்போம்

## திலகநாதன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 27

பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள திட்டங்களை எதிர்வரும் காலத்தில் நிறைவுபடுத்தவேண்டுமாக இருந்தால் எதிர்வரும் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிப்பதன் மூலம் மேற்கொள்ளலாம் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முல்லைத்தீவு மல்லாவியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் காணப்படும் மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் மிகவும் குறைவான சனத்தொகை காணப்படுகின்றது. துணுக்காய்ப் பிரதேசத்தில்தான் மக்கள் ஏழ்மையில் அபிவிருத்தியுமின்றி வாழ்ந்துவருகின்றார்கள்.

இங்கு எந்த ஒரு வீதிகளும் பூரணப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன. இங்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்ட திட்டங்களாகக் காணப்படுகின்றன.

தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிப்பதன் மூலம் இடைநிறுத்தப்பட்ட திட்டங்களையும் புதிதாகப் பல்வேறு திட்டங்களையும் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்புநிலையம் விரைவில் அமைத்துக்கொடுக்கப்படும். மக்களின் இவ்வாறான தேவைகள் அனைத்தும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கக் காலத்தில் பூர்த்திசெய்யப்படும் - என்றார். (ச-19)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மற்றவர்களை கெட்டவர்கள் என்று
சொல்வதன் மூலம்
நாம் நல்லவர்களாகிவிட மாட்டோம்

– மகாத்மா காந்தி –

# தம்பட்டங்களால் பயனில்லை!

இலங்கையின் மிகப்பெரும் கட்சியென்றால், அது தேசிய மக்கள் சக்திதான் என்று தெரிவித்திருக்கின்றார் அமைச்சரும், சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, தமிழர் பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த ஆசனப் பிரதிநிதித்துவத்தைப் பிரதானப் படுத்தியே அவர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். வடக்கு – கிழக்கில் உள்ள நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களைக் கருத்திற்கொள்ளும் போது தேசிய மக்கள் சக்திக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனினும், தமிழர்களின் பகுதிகளில் அதிகளவான ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சி என்ற அடிப்படையில் பிமல் ரத்நாயக்கவின் கருத்து ஒருவகையில் சரியானதே. அதை முற்று முழுதாக மறுப்பதற்கில்லை.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கருத்துப்படி, தேசிய மக்கள் சக்தி இலங்கையின் மிகப்பெரும் 'தமிழ்க்கட்சியாக' இருக்கின்றது என்று வைத்துக் கொண்டால், இதுவரை தமிழர்களின் நலன்களை மையப்படுத்திய எத்தனை விடயங்களுக்கு அவர்கள் தீர்வை முன்வைத்திருக்கின்றார்கள்? என்ற கேள்வி எழுவது இங்கு தவிர்க்கமுடியாததாகின்றது. தையிட்டி திஸ்ஸவிகாரை உள்ளிட்ட வடக்கு - கிழக்கில் உள்ள ஆக்கிரமிப்பு விகாரைகளுக்கு தேசிய மக்கள் சக்தியால் எந்தத் தீர்வையும் வழங்க முடியவில்லை. அரசியற்கைதிகள் தமது விடுதலை இனியாவது சாத்தியப்படுமா என்றெண்ணி ஒவ்வொருநாளும் ஏமாற்றப்பட்டுவருகின்றனர். காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்குக் காத்திரமான தீர்வொன்று வழங்கப்படவில்லை. இவ்வாறிருக்கையில், 'இலங்கையின் பெரும் தமிழ்க்கட்சி' என்று தம்பட்டம் அடிப்பதால் எந்தப் பயனும் இல்லை.

முதலீட்டு வலயங்கள் அமைக்கின்றோம், தொழில்வாய்ப்பை ஏற்படுத்துகின்றோம், வீதிகளை விடுவிக்கின்றோம் என்று அரசதரப்பு கூறிக்கொள்ளலாம். ஆனால், இந்த நடவடிக்கைகள் அனைத்துக்கும் பின்னால் அரசாங்கம் மிகப்பெருமளவில் பயனடைகின்றது என்பதே உண்மை. பொருளாதார மீளெழுச்சிக்குப் பிரதானமான சில விடயங்களை முதன்மைப்படுத்திச் செயற்படுவதன் மூலம் அதனால் தமிழ் மக்கள் பயனடைந்து விட்டனர், தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்றெண்ணினால் அதைவிட முட்டாள்த்தனம் வேறு ஒன்றுமில்லை.

இப்போது அநுர அரசாங்கம் செய்துகொண்டிருப்பது 'அமைதிப்படுத்தும்' அல்லது 'பூசிமெழுகும்' நடவடிக்கைகளைத்தான். பெரமுனவினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் முன்னெடுக்கும் வழக்கமான அரசியல்தான் தேசிய மக்கள் சக்தியுடையதும் என்ற எண்ணப்பாடு மக்கள் மத்தியில் தோன்றிவிடக்கூடாது என்பதற்காக அவ்வப்போது மக்கள் சந்திப்புகளை நடத்துவதையும், ராஜபக்சக்களுக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்துவதையும், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பட்டவர்த்தனப்படுத்துவதிலும், கைதுகளை முன்னெடுத்து மக்களை அமைதிப்படுத்துவதிலும் அரசாங்கம் கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்றது.

தமிழ் மக்கள் கோரிய மாற்றம் என்பது இதுவல்ல. இந்த நடவடிக்கைகளைத்தான் தேசிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கமுடியும் என்றால், அவர்கள் 'இலங்கையின் மிகப்பெரும் தமிழ்க்கட்சியாக' இருப்பதில் அர்த்தமில்லை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## ஐந்தாவது தவணைக் கடனாக 344 மில்லியன் அமெ. டொலர்

### ஐ.எம்.எவ். இணக்கம்

**கொழும்பு, ஏப். 27**

**சர்வதேச நாணயநிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் 05 ஆவது தவணையை விடுவிப்பதற்கு அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.**

இதனடிப்படையில் 344 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது.

தமது அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது இலங்கை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு மற்றும் இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்புவிடயங்களை ஆராய்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சர்வதேச நாணயநிதியம் தெரிவித்தது.

பொருளாதார இலக்குகளை அடைவதற்கான இலங்கையின் முயற்சிகளை சர்வதேச நாணயநிதியம் பாராட்டியுள்ளதுடன் கடன் மறுசீரமைப்பை இலங்கை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளமையினால் 5 ஆம் தவணையை விடுவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சர்வதேச நாணயநிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கட்டுநாயக்கவில் துப்பாக்கிச்சூடு!

கொழும்பு, ஏப். 27

கட்டுநாயக்க, ஹினடியன பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் வீடொன்றில் இருந்த நபரொருவர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த 29வயதான நபர் சிகிச்சைக்காக மினுவாங்கொடை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)



## படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு, ஏப்.27

இலங்கைக்கு இம்மாதத்தின் கடந்த நான்கு வாரங்களில் மட்டும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டில் இதுவரை 8,66,596 சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர். இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர். இந்த ஆண்டு 3 மில்லியன் சுற்றுலாப்பயணிகளின் வருகையை இலங்கை இலக்காகக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அரசியலில் மீண்டும் பஸில்

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச மீண்டும் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னர் இலங்கை திரும்பவுள்ள பஸில், ஶ்ரீலங்காப் பொதுஜன பெரமுனவின் அரசியற்செயற்பாடுகளை வழிநடத்துவார் என்று அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச–இ)

## உள்ளூராட்சித் தேர்தல் 2,623 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 27

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பில் மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 623 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 13 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 2,421 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 189 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை -சித்திரை 15
28.04.2025
சுபநேரம் : 11.58 - 01.28
ராகுகாலம் : 07.28 - 08.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தாண்டு விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாயத்தை விரிவுபடுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.27

**வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டு மக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்ட காணிகளில் விவசாயச்செய்கையை விரிவுபடுத்த வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.**

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்டப் பதில் செயலர், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்குப் பிரதேசசபை செயலாளரின் பிரதிநிதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர், வீதி அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் பங்கேற்றனர். கடந்த ஆண்டு ஆரம்பத்தில் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கெனக் காணிகள் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தக் காணிகளில் மக்கள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இதுதொடர்பாக விவசாயிகளால் எமக்குப் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவர்களுக்கான மின்சாரவசதி இன்னமும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.

மின்சாரவசதி ஏற்படுத்திக்கொடுப்பதற்குப் பாதைகள் அமைக்கப்படவேண்டும் என மின்சாரசபையினர் கூறுகின்றனர். பாதைகள் அமைப்பதற்குச் சில இடங்களில் இராணுவத்தினரின் பாதுகாப்புவேலிகள் இடையூறாக இருக்கின்றன.

எனவே இந்த விடயங்களைக் களைந்து விவசாயிகள் முழுமையாக விவசாயம் மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

வீதிகள் செப்பனிடுவதற்கு இடையூறாக உள்ள பாதுகாப்புவேலிகளை அகற்றுவது தொடர்பில் இராணுவத்தினருடன் நேரடியாகச்சென்று பார்வையிடுவதற்கு கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. (ஏ-66)

# சோலைவரியை குறைப்போம்!

**வேட்பாளர் காண்டீபன் தெரிவிப்பு**

வவுனியா, ஏப்.27

எதிர்வரும் தேர்தலில் நாம் வெற்றிபெறும் பட்சத்தில் மாநகரசபை அறிவித்துள்ள சோலைவரியை 5 சதவீதமாகக் குறைப்போம் என்று ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் வவுனியா மாநகரசபை வேட்பாளரும் நகரசபை முன்னாள் உறுப்பினருமான சு. காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஆதன (சோலை)வரி 15 சதவீதமாக அறவிடப்பட்டுவருகின்றது. மாநகரத்தின் அபிவிருத்திக்கு வரிவருமானம் அவசியமாக இருந்தாலும் பொதுமக்கள் பாதிப்படையக்கூடியவகையில் அதனை அறவிடுவது பொருத்தமற்ற செயற்பாடே. கடந்தகாலங்களில் மக்கள் எமக்களித்த ஆணையை திறம்படச் செயற்படுத்தியவர்கள் நாங்கள் என்ற ரீதியில் வட்டாரத்தின் அபிவிருத்திக்காக இம்முறையும் எமது கரங்களை மக்கள் பலப்படுத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சு-41-110)



தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (சு-25,66)

# சைவப்புலவர்களிடம் ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 27

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினரால் ஜூன் மாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள சைவ மாநாட்டில் வெளியிடப்படவுள்ள சைவநாதம் 12 ஆவது மலருக்கான ஆக்கங்கள் சைவப்புலவர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

அனுப்பவேண்டிய ஆக்கங்கள் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பாடத்திட்டத்துக்கு உட்பட்டதாக இதுவரையில் சைவநாதம் மலரில் வெளிவராத கட்டுரைகளாக அமைதல்வேண்டும்.

கட்டுரைகள் அச்சுப்பதிப்பு 4 பக்கங்களுக்கு மேற்படாதவாறு மென்பிரதியாக Saivappulavarsangam1960@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும். பிந்திய கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-22,66)



# மலேரியாத் தடுப்பு விழிப்புணர்வு

மன்னார், ஏப். 27

உலக மலேரியாத் தடுப்பு விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மன்னார் மலேரியாத் தடுப்புப் பிரிவு ஆகியனவற்றின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டத்தில் மலேரியாத் தடுப்புச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதற்காக மன்னார் தள்ளாடிச் சந்தியிலிருந்து இருந்து மன்னார் நகர்வரை சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன்போது வீதியோரங்களில் காணப்படும் குப்பைகள், பிளாஸ்ரிக் போத்தல்கள் என்பன அகற்றப்பட்டன. (சு-25, 213)

# ஆசிரிய மாணவர்களுக்கு இறுதிப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 27


2022 மற்றும் 2023 கல்வியாண்டு கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்குப் பரீட்சைத் திணைக்களத்தினால், இறுதிப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 24 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடத்தப்படவுள்ளது. இதற்கமைய, நாடுமுழுவதும் அமைந்துள்ள 8 கலாசாலைகளில் குறித்த பரீட்சை இடம்பெறும். இந்த அணியினருக்கான கற்கைநெறி கடந்த 2024 டிசம்பர் மாதம் நிறைவடைந்த நிலையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இறுதிப் பரீட்சை நடைபெறுமெனக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தெரிவித்தார். (சு-25,66)

# ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஏப்.27

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் 120ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணியளவில் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் பூஜைகள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன. (சு-41)



# பளை நீர்விநியோகத் திட்டங்கள் ஆசிய அபி.வங்கியினர் ஆராய்வு

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற பளை நீர்விநியோகத்திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள் குழுவினர் நேரில் சென்று நேற்று பார்வையிட்டதுடன் பொதுமக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். இதன்போது வறட்சிக் காலத்தில் குடிதண்ணீருக்கு பெரும் நெருக்கடி ஏற்படுகின்றது. பல பிரதேசங்களுக்கு தற்போது வரை நீர்விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டினர். இந்தவிடயம் தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையுடன் தொடர்புகொண்டு வினவியபோது, பொதுமக்கள் குழாய்வழி குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்கு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்படிவங்களைப் பெற்று அதனை பூர்த்திசெய்து வழங்கி உரிய கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் நீர் இணைப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றனர். (சு-25,214, 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள்கள் தேவை

யாழ் இந்து (V) 1992
(கொழும்பில் கடை)
யாழ் (விஸ்வகுலம்) 1987
ஜேர்மன் PR

தொடர்பு:- 071 205 2313

(CS/58092) J-1

## வீடு வாடகைக்குத் தேவை

கந்தர்மடம் கொக்குவில்
ஆகிய பகுதிகளில் 3
அறைகளுடன் கூடிய வீடு
(வடக்கு வாசல்)
வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 076 909 4593

(CS/58094) J-1

## பணியாளர்கள் தேவை

கொழும்பு வத்தளையில் உள்ள
சிமெந்து நிறுவனம் ஒன்றிற்கு
Account Assistent மற்றும்
அலுவலக உதவியாளர்கள் தேவை.
சிங்களம் பேச தெரிந்தவர்கள்
விரும்பத்தக்கது.
சம்பளம் - 75,000/-
தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும்.

தொடர்பு:- 077 760 0444

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள பாடசாலை
சிற்றுண்டி சாலைக்கு
வேலையாள் தேவை.
(பெண்கள் மட்டும்)

தொடர்பு:- 074 260 2738

(CS/58094) J-1

## பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு,சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்- 2025.07.01 தொடக்கம் 2026.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு ,சமைத்த உணவு வழங்குவதற்குத் தகமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்விஉத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2025/ 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 30,000.00 |
| 02. | D/JF/2025/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 260,000.00 |
| 03. | D/JF/2025/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 60,000.00 |
| 04. | D/JF/2025/04 | | ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி | 250,000.00 |
| 05 | D/JF/2025/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 70.000.00 |
| 06 | D/JF/2025/06 | | ஆதாரவைத்தியசாலை, ஊர்காவற்துறை | 125,000.00 |
| 07 | D/JF/2025/07 | | பிரதேசவைத்தியசாலை, நெடுந்தீவு | 20,000.00 |
| 07 | D/JF/2025/08 | | பிரதேசவைத்தியசாலை, அச்சுவேலி | 40.000.00 |
| 08 | D/JF/2025/09 | | பிரதேசவைத்தியசாலை, கோப்பாய் | 75,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.
02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் ஃசேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 –பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 0212226253, 0212214966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரைபரிசீலிக்கமுடியும்.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 28.04.2025 ஆம் திகதி முதல் 19.05.2025 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாகச் ரூபா3.000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.
06. பெறுகை ஆவணங்கள் 20.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.
07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 14 ஆம் திகதி மே மாதம் 2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.
09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,
தலைவர், பிராந்திய பெறுகைக் குழு
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971 மின்னஞ்சல்:
rdhsjaffna 15@gmail .com

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம், மயிலிட்டி பிரதான வீதியில்
யாழ்ப்பாணம் விமானநிலையம்
மயிலிட்டி உப பிரதேச அலுவலகத்திற்கு
அருகாமையில் பண்ணை
அமைப்பதற்கு ஏற்ற 7 பரப்பு காணி
விற்பனைக்கு. தரகர் தேவையில்லை.

077 341 0005, 077 821 3472

## தொழில்நுட்ப உதவியாளர்கள் தேவை

சிலாபத்தில் அமைந்துள்ள இறால் குஞ்சு உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு தொழில் நுட்ப உதவியாளர்கள் தேவை. சம்பளம் 40 ஆயிரத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். உற்பத்தியை பொறுத்து மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும். உணவு, தங்குமிடம் கட்டண அறவீடுகளின்றி வழங்கப்படும். பகல் மற்றும் இரவு வேலைகள் உண்டு. கல்வித் தகமை உயர்தரம் (A/L) அல்லது சாதாரண தரம் (O/L) சித்தி. கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும். வயதெல்லை 20 - 40

தொடர்புகளுக்கு:- 077 483 3931

## நீர்க்கசிவைத் தடுப்பதற்கு

உங்கள் புதிய, பழைய கட்டடங்கள், கோவில், வில்லு மண்டபங்கள், கொங்கிறீட் சிலப்புகள் அனைத்திற்குமான நீர்க்கசிவைத் தடுப்பதற்கும் மற்றும் வீடுகளில் ஏற்படும் வெடிப்புகளை உத்தரவாதத்துடன் சீர்செய்தும் தருவோம். நீங்களும் இரசாயன பொருட்களைப் பெற்றும் சீர்செய்யலாம்.

**கட்டட ஒப்பந்த காரர்களுக்கு விலைக்கழிவு உண்டு**

தரம் குறைந்த போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

10 வருட உத்தரவாதம் உண்டு.
உலகத்தரம் மிக்க இரசாயனப் பொருட்கள்
Finex ஸ்தாபனத்தாரின் வட மாகாண ஏக
விநியோகத்தர்கள். முதன் முதலில்
வடமாகாணத்தில் அறிமுகம் செய்தவர்கள்.

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் வசிக்கும்
வைத்தியர் (Doctor) ஒருவரின்
தாயையும் அவரது வீட்டையும்
பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.

077 262 7812, 077 541 7812

## பணிநிலை வேண்டுகை

இலங்கை முன்னணி பாதுகாப்பு சேவை வழங்கும்
நிறுவனமொன்றிற்கு யாழ் மாவட்டத்தில்
வாடிக்கையாளர் சேவை முகாமையாளர் (Customer
service Manager ) தேவை.

077 873 8175 , 077 018 7219

## வேலையாட்கள் தேவை

தென் மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடை யொன்றில்
தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்
வேலையாட்கள் தேவை. பில் கணக்கு எழுதக்கூடியவர்கள்
விரும்பத்தக்கது
காசாளர் . சமைக்கக்கூடியவர்கள் (மதிய உணவு) விரும்பத்தக்கது
சம்பளம் :- 60.000/-

தொடர்பு:- 077 480 3379

## வேலையாட்கள் தேவை

இலங்கை முன்னணி சிட்ரெக் குழுக சேவை வழங்கும்
நிறுவனமொன்றிற்கு சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்
(SSO) கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (JSO) பெண்
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (LSO) தேவை.

076 583 8405 , 076 873 8175 , 077 018 7219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 26 . 03 . 1931



உதிர்வு 26 . 04 . 2025

## பாலசுப்பிரமணியம் தவநாயகி

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தவநாயகி அவர்கள் (26.04.2025) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை, பாறுப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகளும் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், சுந்தரலிங்கம், தெய்வநாயகி, குணநாயகி, செல்வநாயகி, சௌந்தர்நாயகி, லோகநாயகி, தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொற்கொடியின் அன்பு மருமகளும் பிறேமலதா செல்வறசி மற்றும் குகதாஸ், தரைஞ்சினி, காலஞ்சென்ற குகசீலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகநாதன், சுதர்சன், கிரிதரன், நிலாந்தி, ஸ்ரீரங்கன் ஆகியோரின் மாமியாரும் சாயிந்தன், ஹரிசன், சன்ஜே, அபிநயன், ருக்ஷிகன், அக்ஷயன், ஹரினி அகியோரின் பேர்த்தியாரும் தெய்வநாயகி, பராசக்தி, பார்வதிப்பிள்ளை, திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற அன்னலக்சுமி மற்றும் மாணிக்கவாசன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் திருநெல்வேலி வடக்கில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்பாட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

173, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு

(CS{58100) J-1

தகவல்: குடும்பத்தினர்.
076 861 6110

# சிறுமி துஷ்பிரயோகம் மூன்று பேர் கைது!

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14 வயதுச் சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் நீண்டநாள்களாக அந்தச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளனர் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சிறுமியின் அந்தரங்க வீடியோ ஒன்று உள்ளதாகத் தெரிவித்து, மிரட்டியே அவர்கள் மூவரும் நீண்ட நாள்களாக அந்தச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-27)

# 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி மங்கையற்கரசி கந்தசாமி

(முன்னாள் வட கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளரின் மனைவி)

திதி: 29.04.2025

காரைநகர் பொன்னாவளை களபூமி
764, K.K.S.Road, யாழ்ப்பாணம்.

பிறப்பு 06.03.1939 — இறப்பு 30.04.2007

அன்னாரை இழந்து தவிக்கும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/58052) J-1

## மாதவத்தின் தாய்க்கு மனப்பூர்வ அஞ்சலிகள்.........

கரு சுமந்து கனிவுற்று கருணை மேவி
கண்ணியமாய் கனவுமிக காத்து வளர்த்து
உரு தந்து உணர்வுருகி உவப்பில் தோய
உள்ளன்பால் உயிர்ப்பாக்கி உயர்வுடனே
வருங் கால சமயநெறி தனித்தே ஓங்க
வல்லமை ஞானச் செழுமை துணைசேர
திரு மிகுந்த தொண்டுநாதன் சுவாமிகளை
திசை விளங்கத் தந்த தாயே போற்றி போற்றி .....

மாசில்லா அன்புகொண்ட மாதவத் தாயின் ஆன்மா - என்றும்
ஈசனவன் பாதத்தில் இணைந்திருக்க பிரார்த்தனைகள்.....

*என்றும் ஆறுதல் அன்புடன்....*

LKP டெம்பிள் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தார் மற்றும் ஊழியர்கள்
யாழ்பாணம்
கலியபெருமாள் புருஷோத்தமன் குடும்பத்தினர், இந்தியா
ஸ்ரீ வீரா பேவர் பிளாக் ஓர்க்ஸ் நிறுவனத்தினர், இந்தியா
சிவபூமி அறக்கட்டளை, இலங்கை
Jeyasujan Construction ( Shan Co), ஊரேழு
SKS Construction(Pvt)Ltd, Jaffna

*இவர்களுடன்*

கவிஞர் கு.வீரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமிகள் குருபூசை நிகழ்வு

நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அபிஷேகம், திருமுறை மற்றும் நற்சிந்தனை ஓதலைத் தொடர்ந்து, 'பழமையை பேணல்' எனும் தொனிப்பொருளில், யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறைத்தலைவர் கலாநிதி பொ. சந்திரசேகரம் உரையாற்றவுள்ளார். (ச-25,66)


## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 08 . 1944



இறப்பு 26 . 04 . 2025

### இராசரத்தினம் யோகம்மா

சரவணையைப் பிறப்பிடமாகவும் யழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் யோகம்மா அவர்கள் (26.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், சதாசிவம், லெட்சுமி, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சசிகலாதேவி, யசோதாதேவி, சுவர்ணமாலா சதானந்தன், சிவானந்தன், கணேசராசா (அமரர்), வாமதிதேவி, சிவறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

84/5 தபாற்கந்தோர்லேன்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்
077 677 9383



## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 12 . 1939



மண்ணில் 24 . 04 . 2025

### குமாரவேலு செல்வராசா

பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் ஆர்ச்சியடி ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு செல்வராசா 24.04.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காஞ்சென்ற குமாரவேலு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மைத்துனரும் லதீசன் (ஆசிரியர்- யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தி), நளினி (லண்டன்), காலஞ்சென்ற சயந்தினி ஆகியோரின் தந்தையும் தாரணி (பிரதேச செயலகம்- உடுவில் - அபிவிருத்தி உத்தியோத்தர்), சுபேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நிஷானா, அக்சயன், ஜேமிஷா, அபிசயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயந்தினி (அதிபர்- யா/புளியங்குளம் மகா வித்தியாலயம்), ஜெயகுமாரினி, சிவதர்சன், சிவசங்கர், சிவகரன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.04.2025 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்
077 3753699
077 9599421


# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 27

வண்ணை கந்தைமடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை காலை 6.50 மணியளவில் இடம்பெறவுள்ளது. பாலஸ்தாபன கும்பாபிஷேகத்துக்கான ஆரம் பக்கிரியைகள் எதிர்வரும் 29ஆம் திகதி அதிகாலை 5.50 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ச-17)

# தவறான முடிவெடுத்து மாணவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அண்மித்ததாக உள்ள விடுதியொன்றில் தங்கியிருந்து கல்விகற்று வந்த நிலையிலேயே, நேற்றுக் காலை தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-27)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மநே நமஹ

## மரண அறிவித்தல்



### திருமதி கந்தசாமி செல்வராணி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி செல்வராணி (வவா) அவர்கள் (26.04.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - தையல்நாயகி ஆகியோரின் அன்புமகளும் சுப்பிரமணியம் - செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி (யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை- இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் சரோஜினிதேவி, வில்வராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரி, சியாமளா, ரஜனி, றேணுகா, நிர்மலா, மஞ்சுளா, துஸ்யந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் முரளிதரன், மனோகர், கணேஸ்ஜயா, முருகதாஸ், கோபாலபிள்ளை, சதீஸ் குமார், பால்ராஜ் ஆகியோரின் மாமியும் பிரவீனா, தர்ஷனா, லக் ஷனா, வினோபாஜி, சங்கீதா, கயல்விழி, நிதர்சன், நிவேதா, கீர்த்தன், பிரவீன், பவித்திரன், நிஷாந்தினி, பிரசாந், லக் ஷிகரன், சஜீபன், சுபாங்கி, சாகித்யன், சாத்வீகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அதிதி, ஆதிரன், சாஷ்வினி, பிரதிக்ஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பொன்னம்பலம் வீதி, கச்சாய் றோட், சாவகச்சேரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் திங்கட்கிழமை (28.04.2025) 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொன்னம்பலம் வீதி,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்
தொடர்பு: 076 616 6699



## மரண அறிவித்தல்



### கேமலதா சச்சிதானந்தம்

யாழ். கோண்டாவிலை பிறப்பிடமாகவும் இணுவில், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கேமலதா சச்சிதானந்தம் அவர்கள் 24.04.2025 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவராஜசிங்கம் யோகரஞ்சிதம் ஆகியோரின் கனீஷ்ட புதல்வியும், இராசையா இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சச்சிதானந்தம் இராசையா அவர்களின் பாசமிகு மனைவியும், தக்சிகா, கபிலன் ஆகியோரின் அன்பு தாயாரும், ரூபன், காவேரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌதம், அர்ஜுன், நிலா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், சுவர்ணலதா, மோகனலதா வரதராஜ் (கோபி), சஞ்சீவ் ராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற ரஞ்சிதன், மற்றும் சசிதரன், விஜித்தா, பூமணி சண்முகேஸ்வரன், சிவலோகநாதன் ராஜதேவி, இராணி மகாதேவன், லக்சுமிதேவி தேவராஜா, கைலாசபிள்ளை(சிறி) பாமதி, சிவஞானசுந்தரம் அமுதா, விக்கினேஸ்வரன் தசிந்தா, சிவகுமாரன் கலாநிதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றாரர் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறுதிக்கிரிகைகள் நடைபெறும் இடம்
காலம் : 27.04.2025
நேரம் : காலை 9:00 மதியம் 13:00
இடம் : Woodbine. Chapel Ridge Cremation, Canada

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப்...

வரை இடம்பெற்றது. 3 லட்சத்து 33 ஆயிரத்து 183 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களில் 2 லட்சத்து 53 ஆயிரத்து 390 பேர் பாடசாலை விண்ணப்பதாரர்களாவர். 79 ஆயிரத்து 793 பேர் தனியார் விண்ணப்பதாரர்களாவர். உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை www.doenets.lk, www.results.exams.gov.lk ஆகிய இணையத் தளங்களில் பார்வையிடமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## முஸ்லிம்...

பர்ஹத் மாவட்டத்தில் முதலிடத்தைப் பிடித்துச் சாதனை படைத்துள்ளார்.
2024ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. அதில் விஞ்ஞானப் பிரிவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்ற மொகமட் முபாரக் முகமட் பர்ஹத் என்ற மாணவன் 3ஏ சித்தியைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 187ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். (அ-ம-110)

## யாழ்ப்பாணம்...

வாரணன் வர்த்தகத் துறையில் முதலிடம் பெற்றுள்ளார். (அ-ம-26)

## ஹாட்லிக்...

க.தசரத் என்ற மாணவனே இவ்வாறு மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளார். (அ-ம-26)

## இரட்டைப்...

அடிப்படையில் யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த இரண்டு மாணவர்கள் (இருவரும் இரட்டையர்கள்) மாவட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெற்றுள்ளனர்.
யமுனாநந்தா பிரணவன் மாவட்ட ரீதியில் முதலிடத்தையும், தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தையும், யமுனாநந்தா சரவணன் மாவட்ட ரீதியில் இரண்டாம் இடத்தையும், தேசிய ரீதியில் ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.
இவர்கள் இருவரும், யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தாவின் இரட்டைப் புதல்வர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தேசியக்...

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு, யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது: நாடாளுமன்றத் தேர்தலின்போது பெருவாரியான மக்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குத் தமது வாக்குகளை வழங்கியிருந்தனர். ஆனால், அன்றைய முடிவு தவறு என்று மக்களில் பலர் உணர்ந்துள்ளனர். இன்று மக்களைச் சந்திக்கும் போதெல்லாம் தமது தவறு தொடர்பில் வெளிப்படையாக அவர்கள் கருத்துக் கூறுகின்றனர்.
தற்போதைய ஜனாதிபதியான அநுர, பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்று வலுவாகக் குரல் கொடுத்த ஒருவர். ஆனால், அதிகாரம் கைகளுக்கு வந்ததும் அந்தச் சட்டத்தை நீக்கும் எண்ணம் அவரிடம் இல்லை. தற்போது அவர்கள் கூறும் கருத்துக்கள் அனைத்தும் தேர்தல் கால வாக்குறுதிகளே. தையிட்டி திஸ்ஸ விகாரை உட்பட பல வாக்குறுதிகளை வழங்குவதை தற்போது அவதானிக்க முடிகின்றது. எனவே எமது மக்கள் அவர்களின் கபடத்தனமான வாக்குறுதிகளை விளங்கிக் கொள்ள வேண்டும். தாம் வழங்கும் வாக்குறுதிகள் எவற்றையும் அரசாங்கத்தினர் நிறைவேற்றமாட்டார்கள். இதுவே உண்மை - என்றார். (அ-ம-26)

## அனைத்து...

படுத்துவோம் இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர கலந்துகொண்டு உரையாற்றினார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் எமது நாட்டில் மிகப்பெரும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது. குடும்ப ஆட்சிகள் அனைத்தும் முடிவுக்கு வந்தன. அதைத் தொடர்ந்து, வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் அனைத்து மக்களின் அன்பையும், நம்பிக்கையையும் பெற்ற நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டது. கிளிநொச்சி உட்பட வடக்கு மக்கள் அனைவரும் ஆதரவை வழங்கி எம்மைத் தெரிவுசெய்தனர்.
எமது வெற்றியின்மூலம் நாட்டில் பிரிவினைவாத அரசியல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது ஒருதாய் மக்களாக நாங்கள் நாட்டை மேம்படுத்தி வருகின்றோம். மே மாதம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தியை மக்கள் வெற்றியடையச் செய்யவேண்டும். உங்கள் பிரதேசம் செழிப்பான அபிவிருத்தியைக் காணவேண்டும். அதற்கு தேசிய மக்கள் சக்தியினர் உள்ளூராட்சிகளில் ஆட்சியமைக்க வேண்டியது அவசியம்.
இப்போது நாங்கள் அதிகாரத்தில் உள்ளோம். நிச்சயம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம். வனப் பாதுகாப்புத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ள காணிகளை உரிய ஆய்வின் பின்னர் விடுவிப்போம். பாதைகளைத் திறந்துள்ளோம். தொடர்ச்சியான நடைமுறைகள் ஊடாக மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்போம் - என்றார். (அ-ம-113)

## தீர்வை...

என்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பரப்புரைக்கூட்டம் மன்னாரில் நேற்று மாலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை தமிழரசுக் கட்சிக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த வாக்குகளை விடவும், இம்முறை அதிகளவான வாக்குகள் கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைத்தால் மட்டுமே இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னமும் வெற்றிடமாக உள்ளது என்ற விடயத்தை நாங்கள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் வெளிப்படுத்த முடியும்.
தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்று வழங்கப்படவில்லை. அவர்களின் அரசியல் அபிலாஷைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்ற செய்தியை நாங்கள் சொல்ல வேண்டுமாக இருந்தால், உள்ளூராட்சித் தேர்தலில் வலுவான ஆணை எமக்கு வழங்கப்படுவது அவசியம்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டனர் என்றும், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் அரசியல் தீர்வைக் கோரவில்லை என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினர் கூறிவருகின்றனர். இம்முறையும் வடக்கு மக்களின் வாக்குகளை இலகுவாகப் பெற்று விடலாம் என்று எண்ணுகின்றனர். அபிவிருத்திக்காக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது என்றால், கடந்த 6 மாதங்களுக்குள் நடந்த அபிவிருத்தித் திட்டங்கள் என்ன? என்பதை மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். பொய்களைக்கூறி ஆட்சியைப் பெறலாம் என்றும், ஆட்சியைத் தக்கவைக்கலாம் என்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எண்ணியிருக்கின்றது. இந்த எண்ணம் ஈடேறுவதற்கு இம்முறை அனுமதிக்கக் கூடாது. எமது மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (அ-ம-56)

## 6 மாணவர்...

இதன்படி உயிரியல் பிரிவில், முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி மாணவிகளான நர்த்திகா மாவட்டத்தில் முதலிடத்தையும், மதுவிழி இரண்டாம் இடத்தையும், அர்ச்சயா மூன்றாம் இடத்தையும், செம்மலை மகா வித்தியாலயத்தின் மாணவியான ஜதிகா நான்காம் இடத்தையும், முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி மாணவர்களான சஜிந்தன் ஐந்தாம் இடத்தையும், யதுர்சிகன் ஆறாவது இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் 3ஏ பெறுபேறு கிடைத்துள்ளது. (அ-ம-26)

## உரிமையைக்...

செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு, யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் அரசியல் வரலாற்றில் இனங்களுக்கிடையில் இனவாதத்தை விதைத்தவர்களில் முன்னிலை வகிப்பவர்கள் தற்போதைய ஆட்சியாளர்களான தேசிய மக்கள் சக்தியினரே. தற்போதைய அரசாங்கத்தினரின் கடந்தகால வரலாற்றை நாங்கள் மறக்கவில்லை.
வவுனியாவுக்கு அண்மையில் வருகை தந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனவாதிகள் என்ற அர்த்தத்தில் கருத்துக்களை முன்வைத்துவிட்டுச் சென்றுள்ளார். தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பதற்குப் பெயர் இனவாதம் என்றால், அந்த இனவாதத்தைச் செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.
தேசிய மக்கள் சக்தியினரின் பொய்கள் காரணமாகவும், தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையின்மை காரணமாகவுமே கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அதிகளவான வாக்குகளை அவர்களுக்கு வழங்கினார்கள். தற்போது தமிழ்க் கட்சிகள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் ஒன்றுபட்டுள்ளன.
நாங்கள் மிகவும் ஒற்றுமையாகச் செயற்பட்டு ஜே.வி.பி. என்கின்ற தேசிய மக்கள் சக்தியினரை விரட்டியடிக்கவேண்டும். உள்ளூராட்சித் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தால், தமிழ் மக்கள் தொடர்ச்சியாகத் தமக்கு ஆணையைத் தருகின்றனர் என்றுகூறி சர்வதேசத்தில் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வை இருட்டிப்புச் செய்வார்கள். எனவே தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும் - என்றார். (அ-ம-125)

## இரட்டைக்...

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
மன்னார் பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் 38 வயதுடையவர் என்றும், அவர் பிரதான சந்தேகநபர்கள் தப்பிச் செல்வதற்கு உதவினார் என்றும் விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-56)

## கனகராயன்குள...

2024ஆம் ஆண்டின் உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. இதில், கணிதப் பிரிவில் வவுனியா கனகராயன்குள மகாவித்தியாலய மாணவன் குகதாசன் தனோஜன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார். குறித்த பாடசாலையின் வரலாற்றில் ஒரு மாணவன் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றமை இதுவே முதல் தடவையாகும். (அ-ம-110)

## யாழ். இந்து...

தெரிவித்துள்ளது. உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 22 மாணவர்களும், கணிதப்பிரிவில் 27 மாணவர்களும், வணிகப் பிரிவில் ஒரு மாணவரும் உள்ளடங்கலாகவே 55 மாணவர்கள் 3ஏ பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். மேலும் 55 மாணவர்கள் 2ஏ பெறுபேற்றையும், 19 மாணவர்கள் ஏ2பி பெறுபேற்றையும் பெற்றுள்ளனர். (அ-ம-26)

## பாப்பரசரின்...

பீற்றர்ஸ் பசிலிக்காவில் இலங்கை நேரப்படி நேற்று நண்பகல் 1.30 மணியளவில் திருத்தந்தைக்கான இறுதித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவரின் புகழுடல் சென். பீற்றர்ஸ் பசிலிக்காவுக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டு சான்தா மரியா பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது.
திருத்தந்தை பிரான்சிஸின் புகழுடலைத் தாங்கிய வாகனப் பவனி இடம்பெற்ற போது, வத்திக்கான் பேராலயத்துக்கு வெளியே அண்ணளவாக 2 லட்சத்து 50 ஆயிரம் பொதுமக்கள் திரண்டிருந்தனர். கைகளில் கத்தோலிக்க திருச்சபையின் கொடிகளை ஏந்தியவாறு அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறியழுதனர்.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி உள்ளிட்ட உலகத் தலைவர்களும் திருத்தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர். 16 ஆயிரம் பொலிஸாரும் இராணுவத்தினரும் வத்திக்கானில் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உடுவில் டச்சு வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- உடுவில் மகளிர் கல்லூரி அருகாமையில் 150m
- சிறந்த சூழல்
- நல்ல தண்ணீர்
- காணியினுள் பழையவீடு ஒன்று உள்ளது.
- மருதனார் மடம் சந்தை 1Km
- தரகர் தேவையில்லை
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

077 711 5438, 074 339 5269

(CS/58080) J-1

## காணி விற்பனைக்கு

அறுகுவெளியில் A32 பிரதான வீதியில் இருந்து 200M தூரத்தில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

Rajeephan Shanththirasekaran

077 209 8826

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

+61 421 290 240

(CS/57926) J-1

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு நாளாந்த அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 071 443 2989

## மணமகள் தேவை

யாழ். இந்து 35 வயதுடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

077 612 7792

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 07 . 1941

மறைவு 22 . 04 . 2025

### கதிரவேலு சின்னம்மா

அனலதீவைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி திருநெல்வேலி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு சின்னம்மா (2.04.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-கண்மணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதி-சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிந்தாமணி, அப்புக்குட்டி, நாகம்மா, செல்லையா, செல்லம்மா மற்றும் மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோகரன் (கனடா), யோகேஸ்வரி (பிரான்ஸ்), கருணாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்-யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), Dr.லோகநாதன் (கனடா), உதயசுந்தரி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் புஸ்பராணி (மன்னார்), செல்வரட்ணம் (பிரான்ஸ்), சிவதாசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்-யாழ் இந்துக்கல்லூரி), Dr.லோயலா மதுரநாயகி (கனடா), வரகுணன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் குகராஸ், சாரங்கன், தனுஷா, லக்ஸ்மன், சங்கவி, நிருஷா, வர்ஷா, லோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.04.2025 (செவ்வாய்க்கிழமை), திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தனு ஆட்"
35/11 ஆடியபாதம் வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

தகவல்: குடும்பத்தினர்
021 222 5056, 077 960 3229

(CR 1091) V-1

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி கண்டாவளையில் மடுக்கரை, கள்ளக்குறிச்சி கிளிநொச்சி வயல்காணி 115 பரப்பு விற்பனைக்கு உண்டு. (5 ஏக்கர்)

076 322 1746, 077 044 9243

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

வவுனியா வைரவர்புளியன்குளம் கதிரேசு வீதியில் 1 பரப்பு காணி 12 அடி பாதையுடன் 2 அறை வீடும் காணியும் (International பாடசாலைக்கு அருகில்) விற்பனைக்குண்டு.

077 200 7836

## வெடிவிபத்தில் 500 பேர் காயம்

ஈரானின் துறைமுகம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற வெடிவிபத்தில் 8 பேர் உயிரிழந்ததுடன், 500 பேர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 12 . 1945

மறைவு 25 . 04 . 2025

### கதிர்காமநாதன் கமலாம்பாள்

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் கமலாம்பாள் (25.04.2025) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-அருளம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிர்காமநாதனின் அன்பு துணைவியாரும், சியாமா, மகிந்தன் சுகந்தன், ஆகியோரின் அன்பு தாயாரும் புஷ்பராணி, ஜெயரட்ணம் (லண்டன்), தில்லைநாயகி (கனடா), டியாலதாஸ் (கனடா) மற்றும் காலஞ்சென்ற வசந்தியின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, மகேஷ்வரியின் அன்பு மைத்துனியும், தர்மினி, சத்தியபாமா ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் சுகணா, தமிழினியின் குயிலினியன், தனுசிகா மற்றும் திவாகர் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(தபால்கட்டை சந்திக்கு அருகில்)
கண்டி வீதி அரியாலை,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 58038) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Spoken English and Grammar**

GCE, O/L எடுத்தவர்கள் தமது ஆங்கில அறிவை அதிகரிக்கும் Spoken வகுப்புக்கள் காலை 8.00 - மாலை 3.00 வரை திங்கள் - வெள்ளி மட்டும்.
K.Ganesh B.A யாழ் நாவலர் அன்னசத்திர வீதி

**077 766 8725**

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில், கண்டி வீதியிலிருந்து 200m தூரத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**077 224 7902**

**வீடு வாடகைக்கு தேவை**

மானிப்பாய், கொக்குவில், தாவடி, திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய ஏதேனும் பகுதியில் 1 1/2 மாத காலப்பகுதிக்கு வாடகைக்கு தேவை.

**077 308 7172**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.04.2025

பக்கங்கள்: 08

சஞ்சீவி

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 சித்திரை 14 ...ற்றுக்கிழமை (27. ... 42

> பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்
> கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை – நனிபெரிதும்
> வேல்கண்ணள் என்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
> கோல்கண்ண ளாகும் குனிந்து.
>
> – நாலடியார்



# தமிழ்த் தேசியம் எதிர் என்.பி.பி.?

○ நிலாந்தன்

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் வேட்பாளர் என்னிடம் கேட்டார்.ஒரு துண்டுப்பிரசுரத்தைத் தயாரிப்பதற்கு பின்வரும் கேள்விகளுக்கு கவர்ச்சியான விடைகள் வேண்டும் என்று. முதலாவது கேள்வி,தேசிய மக்கள் சக்திக்கு ஏன் வாக்களிக்கக்கூடாது? இரண்டாவது கேள்வி, மேற்படி வேட்பாளருடைய கட்சிக்கு ஏன் வாக்களிக்கவேண்டும்? மூன்றாவது கேள்வி, ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது?

நான் அவரிடம் சொன்னேன், முதலிரண்டு கேள்விகளும் சரி மூன்றாவது கேள்வி பொருத்தமானதா? என்று. ஏனெனில் என்.பி.பி.க்கு எதிராக தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையே போட்டித் தவிர்ப்பிற்கு போவதன் மூலம்தான் வாக்குத் திரட்சியைப் பாதுகாக்கலாம். இல்லையென்றால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தது போல தமிழ் மக்கள் வாக்களிப்பார்களாக இருந்தால் என்.பி.பி.க்குரிய வெற்றி வாய்ப்புகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும். தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரே நேரத்தில் என்.பி.பி.க்கு எதிராகவும் ஏனைய மூன்று தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு எதிராகவும்ஆக மொத்தம் நான்கு தரப்புகளுக்கு எதிராகப் போட்டியிட வேண்டி வரும்.

இது என்.பி.பி.க்கு உற்சாகமூட்டக்கூடிய ஒரு விடயம்.தேர்தல் களத்தில் ஒப்பீட்டளவில் என்.பி.பி. அதிகம் உற்சாகமாக வேலை செய்கிறது என்றே தோன்றுகிறது. கிராமங்கள் தோறும் நகரங்கள் தோறும் அவர்கள் தாங்கள் "எங்கும் இருக்கிறோம்" என்ற ஒரு தோற்றம் வரத்தக்க விதத்தில் பரப்புரையை காட்சி மயப்படுத்துகிறார்கள். தமிழ்க் கிராமங்களிலும் நகரங்களிலும் கண்படுமிடமெல்லாம் அவர்களுடைய சுவரொட்டிகளும் பதாகைகளும் உள்ளன. அது மட்டுமல்ல, ஏனைய எல்லாக் கட்சிகளையும் விட என்.பி.பி.தான் அதிக அளவில் பெருங்கூட்டங்களை ஒழுங்குபடுத்துகிறது. இந்தக்கூட்டங்களில் அரச பிரதானிகள் கலந்து கொள்கிறார்கள்.

என்.பி.பி.க்கு அடுத்தபடியாகத்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழரசுக் கட்சியும் வேலை செய்கின்றன என்று தோன்றுகிறது.தமிழ்த் தேசிய கட்சிகள் இதுவரை குறிப்பிட்டுச் செல்லக்கூடிய பிரமாண்டமான கூட்டங்களை ஒழுங்குபடுத்தியிருக்கவில்லை.வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் கூட்டங்கள்தான் நடக்கின்றன.இது கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் ஒப்பிடப்பட்ட ஒரு விடயம்.அப்பொழுதும் என்.பி.பி.தான் அதிகம் பெருங் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது.அதுவும் அது பெற்ற வெற்றிகளுக்கு ஒரு காரணம்.தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களிடம் நிதி இல்லை என்று கூறுகின்றன.புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து பெரிய அளவில் நிதி திரளவில்லை என்றும் தெரிகிறது. அவ்வாறு பெருங்கூட்டங்களை நடத்தாத ஒரு பின்னணிக்குள் தேசிய மக்கள் சக்தியானது அரங்கில் அதிகம் வேலை செய்யும் ஒரு கட்சி என்ற தோற்றம் எழுகிறது.

அண்மையில் நெடுங்கேணிப் பகுதிக்கு பிரதமர் ஹரிணி போனபோது. அங்கே அவரை வரவேற்று பதாகைகள் தொங்க விடப்பட்டன.அந்தப் பதாதைகளை கட்டியவர்களில் ஒருவர் தடுப்பிலிருந்து வந்த முன்னாள் இயக்கத்தவர் என்றும் மற்றவர் ஒதியமலைப் படுகொலையில் கொல்லப்பட்டவரின் மகன் என்றும் அப்பகுதியைச் சேர்ந்த தமிழ்த் தேசியக் கட்சி ஒன்றின் செயற்பாட்டாளர் தன்னுடைய முகநூல் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அந்தத் தகவல் சரியா பிழையா என்பது தெரியவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தியை ஆதரிப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் அவர்களில் குறிப்பிடத்தக்க அளவு தொகையினர் முன்பு தமிழ்த் தேசியக் கட்சிகளோடு நின்று உழைத்தவர்கள் தான். இங்கு யாழ் .பல்கலைக்கழகத்தை ஒரு குறிகாட்டி எனலாம். ஒரு காலம் தமிழ்த் தேசிய ஆத்மாவை அடைகாத்த மையங்களில் அதுவும் ஒன்று. ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் மிக ஆபத்தான அரசியல் சூழலில் பல விரிவுரையாளர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவாக வேலை செய்தார்கள்.சிலர் கைது செய்யப்பட்டார்கள்.சிலர் தலைமறைவாக நேரிட்டது. அப்படிப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களில் எத்தனை பேர் இப்பொழுது தமிழ்த் தேசியக் கட்சிகளோடு பகிரங்கமாக நிற்கின்றார்கள்?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் இதுதான் நிலைமை. அப்பொழுது கிட்டத்தட்ட 15 விரிவுரையாளர்கள் ஓர் அறிக்கை விட்டிருந்தார்கள்.அந்த அறிக்கையில் அவர்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதனை நேரடியாகச் சொல்லத் தயங்கினார்கள்.ஆனால் இப்பொழுது அவர்கள் வெளிப்படையாகவே தேசிய மக்கள் சக்தியின் மேடைகளில் தோன்றுகிறார்கள்.அவர்களில் ஒருவர் யாழ்.மாநகரசபைக்குரிய பிரதான வேட்பாளர். மற்றொருவர் மொழிபெயர்ப்பாளராக தமிழ் அரசியற் சூழலிலும் இலக்கியச் சூழலிலும் நன்கு தெரியவந்த ஒருவர். எளிமையானவர். சைக்கிளில்தான் திரிவார். அநுரவின் நண்பர். பல ஆண்டுகளுக்கு முன்பு யாழ். வீரசிங்க மண்டபத்தில்.விடுதலைப் புலிகளால் ஒழுங்கமைக்கப்பட்ட "மானிடத்தின் ஒன்று கூடல்" நிகழ்வில் மொழிபெயர்ப்பாளராக இருந்தவர்.கிட்டு பூங்காவில் நடந்த அநுரவின் கூட்டத்தில் அவர்தான் மொழிபெயர்ப்பாளர்.

இத்தனைக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்தான் அதிகம்.ஆனால் அவர்கள் அமைப்பாக்கப்படவில்லை. தமிழ் மக்களின் பண்பாட்டுத் தலைநகரம் ஒன்றில் அமைந்துள்ள உயர் கல்வி நிறுவனமானது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கல்விச் சமூகமாக ஏன் வெளிப்படையாக இயங்கத் தயங்குகின்றது?ஆசிரியர்களும் சரி மாணவர்களும் சரி ஒரு சமூகமாக செயற்படத் தயாரில்லை.கடந்த ஜனாதிபதி தேர்தலின் போதும் அரசறிவியல் துறைத் தலைவர் ஒருவர் மட்டும்தான் பொது வேட்பாளருக்கான அணியில் வெளிப்படையாகக் காணப்பட்டார். ஆசிரியர்களும் ஒரு சமூகமாக வரத் தயங்கினார்கள் மாணவர்களும் உதிரிகளாகவே வந்தார்கள். அறிக்கைகள் விட ஆயிரம் அமைப்புகள் உள்ளன. ஒரு பல்கலைக்கழகம் அறிக்கையோடு நின்றுவிட முடியாது.கடந்த நாடாளுமன்றத் தேர்தலோடு "தமிழ்த் தேசியமா?அல்லது என்.பி.பி.யா?" என்ற மோதல் ஏற்பட்டிருக்கும் ஒரு பின்னணியில்,ஒரு பகுதி விரிவுரையாளர்கள் வெளிப்படையாக என்.பி.பி.க்கு ஆதரவாக நிற்கும் ஒரு பின்னணியில், பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களுக்கு விருப்பமான ஏதாவது ஒரு தமிழ்தேசியக் கட்சியோடு வெளிப்படையாக நின்று உழைப்பதற்கு ஏன் தயாரில்லை?

என்.பி.பி.க்கு ஆதரவான விரிவுரையாளர்கள் வெளிப்படையாக வேலை செய்கின்றார்கள்.அரசாங்கத்தோடு வேலை செய்வது பாதுகாப்பானது.அது உயர் கல்வியையும் பாதிக்காது பதவி உயர்வுகளையும் பாதிக்காது. ஆனால் தமிழ்த் தேசியத்தின் பக்கம் நிற்பது 'ரிஸ்க்' ஆனது.அதனால்தான் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு வெளிப்படையாக நிற்பதற்கு பல்கலைக்கழகம் தயங்குகின்றது என்று ஒரு விளக்கம் தரப்படலாம்.

ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியும் அர்ச்சுனாவும் பெற்ற வெற்றிகளின் பின்னரும், ஒரு பண்பாட்டுத் தலைநகரத்தில் உள்ள உயர் கல்வி நிறுவனம் அவ்வாறு கூறிக் கொண்டிருக்க முடியாது.அதிலும் குறிப்பாக கடந்த 15 ஆண்டுகளாக சிங்களபௌத்த மயமாக்கலை அதிகம் எதிர்கொள்ளும் ஒரு பல்கலைக்கழகம் அவ்வாறு ஓய்ந்திருக்க முடியாது.யாழ். பல்கலைக்கழகத்தின் சில துறைகளில் ஒப்பீட்டளவில் சிங்கள மாணவர்களின் தொகை அதிகரித்து வருகிறது.கடந்த 15 ஆண்டுகளில் அதிகம் சிங்கள பௌத்த மயப்பட்டு வரும் நிறுவனங்களில் யாழ். பல்கலைக்கழகமும் ஒன்று. அது கடந்த 15 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசியலின் ஒரு குறி காட்டியாக நிற்கிறது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களையும் கட்சிகளாக வளர்த்துக் கொள்ளவில்லை. தமிழ் மக்களையும் ஒரு தேசமாகத் திரட்டிக் கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகள்,கடந்த 15 ஆண்டுகளாக கட்டமைப்புக்களுக்கூடாகச் சிந்திக்கத் தவறிவிட்டன.மாணவ அமைப்புக்கள்,ஆசிரியர்கள் மற்றும் அறிவுஜீவி அமைப்புகள்,மகளிர் அமைப்புகள்,தொழிற்சங்கங்கள்,தொழில் சார் அமைப்புக்கள் போன்ற அமைப்புகளை உள்வாங்கி தமிழ்த் தேசிய அரசியலை கட்டமைப்புகளுக்கு ஊடாக கட்டியெழுப்பத் தவறி விட்டன.அந்த வெற்றிடத்திற்குள் கட்டமைப்புகளை உருவாக்கும் பயிற்சியும் அனுபவமும் மிக்க ஜே.வி.பி.யை அடித்தளமாகக் கொண்ட என்.பி.பி. தீயாக இறங்கி வேலை செய்கின்றது.ஏனென்றால் அப்படிப்பட்ட கட்டமைப்புகளை இணைத்து உருவாக்கப்பட்டதுதான் என்.பி.பி.

கடந்த பொதுத் தேர்தலில் அவர்களுக்கு கிடைத்த வெற்றி எதிர்பாராத ஒன்று. ஆனால் இனி வரக்கூடிய தேர்தல்களில் அந்த வெற்றியை எப்படிப் பாதுகாப்பது?எப்படி அடுத்த கட்டத்துக்கு வளர்த்துச் செல்வது?என்றுதான் அவர்கள் திட்டமிடுகிறார்கள். எனது நண்பர் ஒருவர் சுட்டிக்காட்டியதுபோல தேர்தல் காலத்தில் தலதா மாளிகையின் புனித தந்த தாதுவை மக்கள் தரிசிப்பதற்கு அனுமதித்ததன் மூலம் என்.பி.பி. சிங்கள பௌத்த வாக்குகளைக் கவரப்பார்க்கிறது. அதனால் கண்டி மாநகரத்தின் தெருக்களில் எதிர்பாராத விதமாக குவிந்த யாத்திரிகர்கள் கண்டி மாநகரத்தை குப்பைத் தொட்டியாக்கி விட்டார்கள்.தந்ததாதுவைக் காட்டப்போய் குப்பை கொட்டியதில் முடிந்து விட்டதா?

என்.பி.பி. யாழ்ப்பாணத்தில் பலாலி வீதியைத் திறக்கின்றது. சோதனைச் சாவடிகளை மூடுகின்றது,மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குப் போகின்றது. கண்டியில் தலதா மாளிகையைத் திறந்து விடுகிறது.எல்லாமே தேர்தல் உள்நோக்கத்தைக் கொண்டவை.கிட்டுப் பூங்காவில் அநுர வந்த பொழுது அவருக்கு கொடுக்கப்பட்ட வரவேற்புக் காணொலி அதிகமதிகம் பகிரப்படுகின்றது. அவரை நோக்கி ஆண்களும் பெண்களும் தங்களுடைய கைகளை குலுக்குவதற்காக நீட்டுகிறார்கள். சிலர் உணர்ச்சி மேலிட்டால் அல்லது திட்டமிட்டு "ஜெய வேவ" என்று கோஷம் எழுப்புகிறார்கள்.கடந்த பல தசாப்தங்களில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு சிங்கள பௌத்த அரசுத் தலைவருக்கு இப்படி ஒரு வரவேற்புக் கிடைத்ததில்லை.இப்படி ஓர் ஈர்ப்பு இருந்ததில்லை.

"அது திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட ஒரு கூட்டம். திட்டமிட்டு காட்சி மயப்படுத்தப்பட்ட ஒரு விடயம்" என்று கூறிவிட்டுக் கடந்துபோக முடியாது. தமிழ்க் கட்சிகள் விட்ட வெற்றிடத்தில்தான் என்.பி.பி. மேலெழுந்தது.அர்ச்சுனா மேலெழுந்தார்.இப்பொழுதும் தமிழ் தேசியக் கட்சிகள் நான்காக நிற்கின்றன. இது தமிழ் மக்களைக் கவர உதவாது.அதேசமயம் அது என்.பி.பி.க்கு உற்சாகமூட்டுவது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கூட்டு, ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமான ஒரு விடயம்.நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான ஒரு புதிய மாற்றம் அது. எனினும் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதுபோல, தமிழ்த் தேசியக் கட்சிகள் போட்டித் தவிர்ப்புக்கு போகக்கூடிய வாய்ப்புகள் பிரகாசமாகத் தெரியவில்லை. பரப்புரைக் கூட்டங்களிலும் ஒருவர் மற்றவரைத் தாக்கி வருகிறார்கள்.ஒவ்வொரு கட்சியும் 'நான்;நான்' என்று சிந்திக்கின்றது.'நாங்கள்; தேசம்'என்று சிந்திப்பதாகத் தெரியவில்லை. நான்; நான் என்று ஒவ்வொரு வேட்பாளரும் சிந்திக்கும்போது அங்கே "நாங்கள்"என்ற தேசியக் கூட்டுணர்வு ஏற்படாது.நான் நான் என்று சிந்தித்தால் போட்டித் தவிர்ப்பிற்குப் போக முடியாது.நாங்கள் என்று சிந்தித்தால்தான் போட்டித் தவிர்ப்புக்குப் போகலாம்.ஆனால் தேசிய மக்கள் சக்தியோ 'நாங்கள் இலங்கையர்கள்' என்று சொல்லிக்கொண்டு தமிழ்க் கிராமங்களைக் கவ்விப் பிடிக்க முயற்சிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந.பரமேஸ்வரன்

# காலியை ஆண்டது தமிழர்களே!



Admiral Zheng He

சூரிய ஒளியை கைகளால் மறைக்கமுடியாது என்பதை இனியாவது சிங்களப் பேரினவாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். மகாவம்சத்தை இலங்கையின் வரலாற்றைக்கூறும் நூல் என்று யுனெஸ்கோவுக்கு அனுப்பி யுனெஸ்கோ பதிவேட்டில் இடம்பெறச்செய்த சிங்களப் பேரினவாதிகள், இலங்கையிலிருந்த ஐந்து சிவாலயங்களை விஜயன் புனரமைத்தான் என்பதையோ இலங்கையின் பூர்வீகக்குடிகள் தமிழர்களே என்பதையோ ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

இப்போது இலங்கையும் சீனாவும் இணைந்து காலியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றையும், இன்னோர் ஆவணத்தையும் யுனெஸ்கோவுக்கு அனுப்பி அதனை யுனெஸ்கோ தனது சான்றுப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளது. யுனெஸ்கோவின் உயர்மட்ட குழுவும் இதனை அங்கீகரித்துள்ளது. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றும் வரை தமிழே இலங்கையின் ஆட்சி மொழியாக இருந்தது என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

கண்டிப் பிரதானிகள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் செய்து கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி ஒப்பந்தமே இதற்குச்சான்று. கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சிங்களப் பிரதானிகள் ஏழு பேர் (சிறுபான்மையினருக்கு இருந்த அற்ப சொற்ப உரிமைகளையும் நீக்கி இலங்கையை குடியரசாக பிரகடனப்படுத்திய ஸ்ரீமாவோ அம்மையார், யாழ்ப்பாணத்தை புலிகளிடமிருந்து கைப்பற்றி சிங்கக்கொடி நாட்டிய பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை ஆகியோரின் கொள்ளுப்பேரனான ரத்வத்தை திஸாவை உட்பட ) தமிழிலேயே ஒப்பமிட்டுள்ளனர். இந்தக் கண்டி ஒப்பந்தம் சில வருடங்களுக்கு முன்னர் சுவடிகள் காப்பக பணிப்பாளராக கடமையாற்றிய பெண்மணியால் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. கண்டி ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டவர்களின் கையொப்பங்கள் யாவும் ஸ்கான் செய்யப்பட்டு இந்த நூலிலும் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

இலங்கையும்சீனாவும் இணைந்து யுனெஸ்கோவுக்கு சமர்ப்பித்த கல்வெட்டிலும், மையால் எழுதப்பட்ட ஆவணத்தில் என்னதான் இருந்தது?


1873 ஆம் ஆண்டு பாணந்துறையில் இடம்பெற்ற மதரீதியான விவாதம் அல்லது பட்டிமன்றத்தின் பிரதியே அந்த ஆவணம். மையால் எழுதப்பட்டுள்ள இந்த ஆவணம் 27 1/2 பக்கங்களில் அமைந்துள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பாணந்துறை ரன்கொட் விகாரையில் கிறிஸ்தவ பௌத்த குருமாருக்கிடையே இடம்பெற்ற திறந்த விவாதம் இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இரு மதங்களுக்குமிடையிலான புரிந்துணர்வு, நல்லிணக்கம், ஆன்மீக மற்றும் கலாசார விடயங்கள் என்பன இந்த ஆவணத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. பின்னாளில் இந்த ஆவணத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு பௌத்தமதத்தை பாடசாலைகளில் முன்மாதிரியான சமயமாகப் போதிப்பதற்கு வழிவகுத்தது. இது இலங்கை சமர்ப்பித்த ஆவணத்தின் பிரதி.

சீனா சமர்ப்பித்த கல்வெட்டுத் தொடர்பான ஆவணம் தமிழ், பாரசீகம், சீன மொழி ஆகியவற்றில் எழுதப்பட்டுள்ளது. 1409ம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி சீன கடற்படைத்தளபதி செங்ஹீ காலி துறைமுகத்திற்கு விஜயம் செய்த கல்வெட்டை அடிப்படையாகக்கொண்டு சீனாவின் ஆவணம் அமைந்துள்ளது. செங்ஹீயின் மூன்றாவது இலங்கை விஜயத்தை இந்தக் கல்வெட்டு குறிக்கிறது. சீனாவின் நன்ஜிங்கின் துறைமுகத்திலிருந்து மலைக்கோட்டை விகாரைக்கு (mountain temple) அன்பளிப்புகள் எடுத்துவந்ததாக இந்தக் கல்வெட்டு சொல்கிறது. இந்தக் கல்வெட்டில் புத்தர், விஷ்ணு, அல்லா ஆகியோர் தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1911 ஆம் ஆண்டு தொமிலன் என்ற பிரிட்டிஷ் பொறியியலாளர் இதனைக் கண்டெடுத்தார். தற்போது கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ள இந்தக் கல்வெட்டு காலி அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.



Chinese Admira Zhang He's fleet anchored at Beruwala harbour

இந்தக் கல்வெட்டில் ஸ்ரீலங்காவின் தேசிய மொழியான சிங்களம் இடம்பெறவில்லை. இதிலிருந்து தெளிவாகத் தெரிகிற விடயம் என்னவென்றால் 1409 ஆம் ஆண்டில் காலியில் தமிழே அரசகரும மொழியாக இருந்துள்ளது. அங்கு வாழ்ந்த பௌத்தர்கள் சில வேளை சிங்களவர்களாக இருந்தாலும் தமிழர்களின் ஆட்சியின் கீழேயே காலியும் இருந்துள்ளது. அதனையே இந்தக் கல்வெட்டு உறுதிசெய்கின்றது.



This stone tablet, now preserved at National Museum, has become UNESCO Heritage Document

இப்போது சிங்களவர்கள் இந்தக் கல்வெட்டில் ஏன் சிங்களம் இடம்பெறவில்லை என்று தலையைப்பிய்த்துக் கொண்டு ஆராய்ந்துவருகின்றனர். ரவீந்திர விஜேகுணவர்த்தன என்ற கடற்படைத்தளபதி ஐலண்ட் பத்திரிகையில் Why Sinhala omitted in Famous stone inscription by ancient Chinese Admiral? என்ற தலைப்பில் கட்டுரையொன்றை வரைந்துள்ளார். ரவீந்திர விஜேகுணவர்தன பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராகவும், திருகோணமலை எண்ணெய்க் குத பணிப்பாளராகவும், பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்களவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலித்துறைமுகத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் சிங்களம் இடம்பெறாதமை குறித்து சிங்களவர்கள் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளதாகவும் இந்த சுவாரஸ்யமான விடயம் தொடர்பாக தாங்கள் கலந்துரையாடவேண்டுமெனவும் ரவீந்திர விஜேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கட்டுரையில் செங்ஹீ பிறப்பால் முஸ்லிம் எனவும் 1371 ஆம் ஆண்டு பிறந்த செங்ஹீ 62 வயதில் இந்தியாவின் கோழிக்கூடு என்ற இடத்தில் (ஆங்கிலத்தில் Kozhikode என உள்ளது) இறந்ததாகவும் ரவீந்திர விஜேகுணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கீசர் இந்தியாவைக் கைப்பற்ற முன்னரே செங்ஹீ இலங்கைக்கு விஜயம் செய்ததாகவும், தனது வர்த்தகத்தை திறம்பட நடத்தும் நோக்குடன் புத்தர், விஷ்ணு, அல்லா போன்றவர்களின் ஆசியைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இந்தக் கல்வெட்டு வரையப்பட்டிருக்கலாம் எனவும் ரவீந்திர விஜேகுணவர்த்தன ஊகிக்கிறார். 'செங்ஹீ 1405 ஆம் ஆண்டு முதல் தடவை இலங்கைக்கு விஜயம் செய்தபோது பேருவளை துறைமுகத்தில் தரித்துநின்று சிவனொளிபாதமலையை தரிசித்துள்ளார்.

அட்மிரல் செங்ஹீயின் கடற்படை, நம்பமுடியாத அளவிற்கு பெரியதாக இருந்தது. சுமார் 120 மீற்றருக்கும் கூடுதலான நீளம் கொண்ட பாய்மரக் கப்பல்கள் அவரிடம் இருந்தன. இப்போது இலங்கைக் கடற்படையிடம் உள்ள கப்பல்களைவிட அவை நீளமானவை. ( இலங்கைக் கடற்படையிடம் தற்போது உள்ள பெரிய கப்பலின் நீளம் 115 மீற்றர் மட்டுமே) அவரது கடற்படையின் எல்லாக் கப்பல்களும் ஐந்து தளங்களைக் கொண்டிருந்தன. கப்பலின் மேற் தளங்களில் பயிர்ச்செய்கையும், கீழ்த் தளங்களில் பன்றி வளர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கப்பல்கள் மிதக்கும் கோட்டைகளாகக் காணப்பட்டன.

இவ்வாறான நூற்றுக்கு மேற்பட்ட கப்பல்கள் மற்றும் சிறிய கப்பல்கள் சீனக் கடற்படையிடம் இருந்தன. சீனக் கடற்படையில் 217 கப்பல்கள் மற்றும் 28,000 மாலுமிகள்/கடற்படை வீரர்களும் இருந்தனர். 1492 இல் கொலம்பஸிடம் மூன்று கப்பல்களும் 90 மாலுமிகளுமே இருந்தனர். கொலம்பஸின் கொடியான "சாந்த மரியாவின் நீளம் 30 மீற்றர் மட்டுமே அட்மிரல் செங் ஹீயின் பெரிய கப்பல்கள் உலகம் முழுவதும் வர்த்தகம் செய்வதற்காக பட்டு, தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள், பீங்கான் குவளைகள் மற்றும் தட்டுகள் போன்ற பெறுமதியான பொருள்களை எடுத்துச்சென்றன.

1411 ஆம் ஆண்டு செங்ஹீ இரண்டாவது தடவை விஜயம் செய்தபோது ஆறாம் பராக்கிரமபாகுவுக்குப் பின்னர் கோட்டையை ஆட்சி செய்துவந்த அழகேஸ்வர என்ற சிங்கள அரசன் செங்ஹீயின் கப்பல் மீது தாக்குதல் தொடுத்து கப்பலை கைப்பற்ற முற்பட்டான். ஆனால் செங்ஹீ தாக்குதலை முறியடித்து அழகேஸ்வர(னை)வை கைது செய்து சீனாவுக்கு கொண்டு சென்றார். வரலாற்று பதிவுகளின்படி, அட்மிரல் செங்ஹீ சிறைபிடிக்கப்பட்ட மன்னர் அழகேஸ்வரரையும் அவரது ஆதரவாளர்களையும் மிங் வம்சத்தின் மூன்றாவது பேரரசரான யோங்லேயிடம் ஒப்படைத்தார். ஆனால் சீனர்கள் தமது வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காகவே கடல் பயணங்களை மேற்கொண்டதாகவும், போர் புரிவதற்காக அல்ல எனவும் தெரிவித்த அரசன் சிறைபிடிக்கப்பட்டவர்களை இலங்கைக்குக் கொண்டுசென்றுவிடுமாறு உத்தரவிட்டார். அந்த உத்தரவின்படி, அட்மிரல் செங்ஹீ மீண்டும் அவர்களை இலங்கைக்கு கொண்டு வந்தார். சிங்கள மன்னனைச் சிறைபிடித்த தாலேயே கல்வெட்டில் சிங்களத்தை செங்ஹீ பயன்படுத்தவில்லை என்று ரவீந்திர விஜேகுணவர்த்தன தன் ஊகத்தை வெளிப்படுத்துகிறார். ஆனால் ரவீந்திர விஜேகுணவர்தனவுக்கு ஒன்று புரியவில்லை , காலியை ஆண்ட மன்னனின் பெயரான அழகேஸ்வர என்ற பெயரைப்பார்க்கவே அங்கு அழகேஸ்வரன் என்ற தமிழரசனின் ஆட்சியே அப்போது நடைபெற்றுள்ளது என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது . அழகேஸ்வரனை சிங்களவர்கள் அழகேஸ்வர (தேவனை நம்பிய தீசனை தேவநம்பியதிஸ்ஸ என அழைத்தது போல்) என்று அழைத்திருக்கலாம்.

இலங்கையின் வரலாற்றை திரித்து எழுதி இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்க முயற்சிக்கும் சிங்கள வரலாற்றாசிரியர்களும், பிக்குமாரும், அரசியல்வாதிகளும் இனி என்ன சொல்லப்போகின்றனர்? தமிழர்களை கள்ளத்தோணிகள் என்றும், ஒல்லாந்தர் காலத்தில் புகையிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக தமிழ்நாட்டிலிருந்து ஒல்லாந்தர்களால் அழைத்துவரப்பட்டவர்கள் என்றும் எழுதும் சிங்கள வரலாற்றாசிரியர்கள் இனியாவது இலங்கையின் பூர்வீகக்குடிகள் தமிழர்கள் தான் என்பதை ஏற்றுக்கொள்வார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடைக்கொழுந்துகளே முதற்கொழுந்துகளான கதை!

சி. செ. சண்முகநாதன்
*(புவியியல் சிறப்புக் கலைமாணி 1974 /1978)*

மேற்கத்தைய பல்கலைக்கழக நிலைக்கல்வி, தென்னாசியாவுக்கே முன்னோடியாக, யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டைக்கு அமெரிக்க மிஷனரிகளுடன் வந்தது அனைவரும் அறிந்ததே. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே இது நிகழ்ந்தமை யாழ்ப்பாணத்தார் மீது வந்த அன்பால் அல்ல.

ஐரோப்பிய காலனியத்தை உலகளாவிப் பதிலீடுசெய்ய நினைத்த அன்றைய அமெரிக்கா, பின்கதவால் இந்தியாவுக்குள் நுழைய எடுத்த எத்தனமே அது.

ஆயினும், யாழ்ப்பாணத்தாருக்குப் புதிய கதவுகள் உள்ளும் புறமும் திறக்கப்பட்டன.

ஆங்கிலக்கல்வி, கணிதம், மருத்துவம், பொறியியல், நிலவளவை, வானியல் போன்றவற்றுக்கு மட்டுமன்றி, தமிழுக்கும் சைவ சித்தாந்தத்துக்கும் பஞ்சாங்கக்கணிப்புக்கும் கூட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடமிருந்தது. இந்தியாவில் பல்கலைக்கழகங்கள் தோன்றியபோது சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதற்பட்டதாரிகளான தாமோதரம்பிள்ளையும் விசுவநாதபிள்ளையும் சென்னைக்குச் சென்று படிக்கவில்லை. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தே சென்னையில் பட்டம் பெற்றார்கள்.

காலனியக்கல்வி மேலாதிக்கத்துக்கு எதிர்வினையாக எம்நாட்டுக் கல்வி ஓட்டத்தை முன்னெடுத்த ஆறுமுகநாவலரது பாடத்திட்ட வரைவில் கணிதம், புவியியல், வானியல், மருத்துவம், வணிகம், விவசாயம், அரசியல் போன்றவை உள்ளடங்கியிருந்தன என்பது இன்று தெரியாமல் போய்விட்டது.

நம்நாட்டு முயற்சியில் உருவான இந்துக் கல்லூரி போன்றவை தொடக்கத்திலேயே கொல்கத்தாசென்னைப் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட புகுமுகக் கல்லூரிகளாக இருந்தன என்பதும் இன்று மறக்கப்பட்ட விடயம்.

பொன்னம்பலம் இராமநாதனின் பரமேஸ்வராக் கல்லூரி இந்த ஓட்டங்களின் ஒரு பாகந்தான். இலங்கைத்தீவில் காலனியம் கைமாறிக்கொண்டிருந்த காலத்தில், கொழும்பை நடுவணப்படுத்தி உருவான உயர்கல்வி நிறுவனவாக்கம் யாழ்ப்பாணத்துக்கு வருவதென்பது, யாழ்ப்பாணத்துக்குத்தொடர்வண்டிப் பாதை வந்த வரலாறு போன்ற இழுபாடாகத்தான் இருந்தது.

இந்த இடைக்காலத்தில், யாழ்ப்பாணத்தில் நாவலர் தொடங்கியிருந்த முயற்சி எட்டாம் வகுப்புப் பள்ளிக்கூடமாகக் கீழிறங்க, அதற்குப் பல பத்தாண்டுகள் பிந்திக் கொழும்பில் தோன்றிய வித்தியோதய, வித்தியாலங்காரப் பிரிவெனாக்கள் பல்கலைக்கழகங்கள் ஆயின. எமது கல்லூரிகள், கொழும்புக்கும் பேராதனைக்கும் மாணவர்களை 'மொழிவாரித் தரப்படுத்தல்' தடைதாண்டி அனுப்பும் பள்ளிக்கூடங்கள் ஆயின. வட்டுக்கோட்டையில் மாத்திரம் வெளிவாரிப் பட்டப்படிப்பு சிறிய அளவில், ஆனால் இருநூற்றாண்டுச் சேகரிப்பில் வந்த பெரிய நூலக வசதியுடன், இயங்கிக்கொண்டிருந்தது.

1974 ஒகஸ்ட்டில் யாழ்ப்பாணத்துக்குப் பல்கலைக்கழக வளாகம் வந்தமைக்கும், 1974 ஜனவரி தமிழாராய்ச்சி மகாநாட்டு அரச அவலத்துக்கும் இடையிலான காரணகாரியத் தொடர்பை விளங்கிக்கொள்ள அரசியல் ஆராய்ச்சி ஒன்றும் தேவையில்லை.


அவசர அவசரமாக வளாகம் தொடங்க, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் சில பகுதிகள், பரமேஸ்வராக் கல்லூரிகள் கையேற்கப்பட்டமை, வழித்தேங்காயைத் தெருப்பிள்ளையாருக்கு உடைத்ததுபோலத் தோன்றினாலும், யாழ்ப்பாணத்து நீண்ட கல்வி மரபின் இரு ஓட்டங்களும் சங்கமித்த குறியீடாக அது அமைந்தது ஒரு கொடுப்பனவு என்றுதான் சொல்லவேண்டும்.

இதன் முதற் பேராசிரியர்கள் அமெரிக்க, பிரித்தானிய, இந்தியப் பல்கலைக்கழகங்களில் பயின்ற கல்விமான்கள் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டியது.

அடுத்துவந்த ஐம்பது ஆண்டுகளில், உலகின் முழு ஆதிக்க சக்திகளும் வந்து மூக்கை நுழைக்கவேண்டிய அளவிற்கு ஈழத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்புலமும் பங்களிப்பும் எத்தகையது என்ற ஆராய்ச்சி வருங்காலத்திற்குரியது. யாழ்ப்பாண வளாகம் வந்தபோது, யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவில், இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டத்திற்காக எற்கனவே படித்துக் கொண்டிருந்த நாங்களும் எங்கள் விரிவுரையாளர்களும் புதிய வளாகத்தின் கலைப்பீடத்திற்கும் விஞ்ஞான பீடத்திற்கும் உள்வாங்கப்பட்டோம்.

யாழ்ப்பாணத்தின் 200 ஆண்டுகாலக் கல்வி ஓட்டத்தில், வட்டுக்கோட்டையில் எஞ்சி நின்ற பல்கலைக்கழகநிலைக் கல்வியின் இறுதி அணி மாணவர்களாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதல் அணி மாணவர்களாகவும் நாம் இருந்தோம் என்பது எமக்குத் தனி வரலாற்றுப் பெருமை தருவது என்றுதான் இப்போது நினைக்கத் தோன்றுகிறது.

எமது உயர்கல்வியானது உலக ஓட்டங்களுடன் பின்னிப்பிணைந்த வரலாற்றையும், எம்மவர் இலட்சியங்களையும், உள்ளுணர்வுடன் உள்வாங்கி[illegible] அடுத்த தலைமுறை முன்செல்லவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. எங்கள் பல்கலைக்கழகம் பொன்விழாக் கண்டதில் மகிழ்வடைகிறோம்.



# கௌரவ மத்திய வங்கி ஆளுநருக்கு...,




உங்களுக்குப் புத்திமதி சொல்லுற அளவுக்கு நான் ஒரு மேதை இல்லை. ஆலடி புத்தி விநாயகரிலைதான் படிச்சனான். அதுவும் விட்டுட்டு வாத்தியாரிட்டை அடிவேண்டிப் படிச்ச படிப்புத்தான். ஆனால் அது ஒரு பெரிய படிப்பு எண்டு நான் நினைக்கிறன். அதிலையும் சின்ன வயசிலைதொட்டுக் குடும்பக் கஷ்டத்தாலை அப்பு சுருட்டுக் கட்ட அனுப்பிப்போட்டார். அங்கை இடைநேரத்திலை பேப்பர் வாசிக்கிறவை. அதைக் கேட்டு அங்கை சுத்திற ஆக்கள் கதைக்கிற கதையளைக் கேட்டுத்தான் வளர்ந்தனான். அந்த அனுபவப் படிப்பை நீங்கள் லண்டன் கேம்பிறிச்சிலையும் படிக்கேலாது எண்டு நினைக்கிறன்.

நாட்டின்ரை திறைசேரி வத்திப்போறது பற்றி ஆக்கள் கதைக்கிறவை. அது ஏன் எண்டு அடிக்கடி நான் யோசிக்கிறனான். போன அரசாங்கங்கள் தேவை இல்லாத விளையாட்டுகளை எல்லாம் விளையாடி நாட்டை வங்குறோத்தாக்கி விட்டிட்டுப்போயிட்டினமாம் . திறைசேரியிலையும் காசு மட்டுமட்டாத்தான் கிடக்காம். அதாலைதான் பிற நாடுகளிட்டைக் கையேந்தி அவை போடுற தாளத்துக்கு ஆடவேணுமெண்ட கட்டாயத்திலை அநுர இருக்கிறதாச் சொல்லுகினம். உலக நாணயநிதியமும் 'கடன் தரலாம் ஆளைக்குறை, அதை இடிச்சுக் கட்டு, அவையோடை உறவுவைக்காதை, இவையோடை இதைச் செய்' எண்டு ஆயிரம் கொண்டிசன் போட்டு இழுத்தடிக்கினமெண்டும் கேள்வி.

அந்த உலக நாணயநிதியமும் கடன் தாறதுக்கு வைக்கிற கொண்டிசனைப் பாக்க அருவருப்பாவும் கிடக்கு. அவை மறைமுகமாக உள்நாட்டு விவகாரங்கள் எல்லாத்துக்கையும் கைவைக்கினம், கைவைக்கப்பாக்கினம். ஒரு ஏழை கடன் வேண்டுறதுக்குப் படாதபாடு படுகிறமாதிரி, நாங்கள் படவேண்டி இருக்கு. அது எங்களுக்குத் தேவையோ?

சிவனே எண்டு எங்கடை தேயிலையை வித்தம்,எங்கடை கோப்பியைக் குடிக்கப் பண்ணினம், எங்கடை றப்பரை வேண்டப் பண்ணினம்,எங்கடை கொப்பறாவைத் தின்னப் பண்ணினம் எண்டு நிம்மதியா இருந்தம். ஆனால் முன்னம் வந்த அரசாங்கங்கள் எல்லாம் வாக்கை வாங்கிறதுக்காக சனத்தை, இலவசம் எண்டும் நிவாரணம் எண்டும் பத்தும் பலதையும் குடுத்து, சனத்தைச் சோம்பேறி ஆக்கிப் போட்டுப் போட்டினம். அதாலை சனமும் 'ஏன் வேலை செய்ய வேணும், சும்மா இருந்து தின்னலாம் தானே? ' எண்டு முயற்சியைக் கைவிட்டதாலை எல்லாக் கொம்பனியளும் வங்குரோத்தாப் போச்சு. சும்மா இருந்து குடுத்ததைத் திண்டிட்டு வாய்க்கு வந்தபடி கதைச்சு பொழுதைப் போக்கிறதிலை உள்ள சுகம் என்னத்திலை இருக்கிது?ஆக என்ன எலக்சன் வரேக்கை போய்க் கீறிப்போட்டு வரவேணும். அதுதான் ஒரு சிரமமே ஒழிய வேறை ஒண்டும் இல்லை.

அதுக்கிடையிலை சண்டை வந்திது.சட்டமும் ஒழுங்கும் கெட்டுது.அவங்கடை கட்டுப்பாடுகளுக்கை இருந்தவை ஒழுங்கா இருந்தினம்.வெளியிலை இருந்தவை ஒழுக்கம் கெட்டு தாங்கள் தாங்கள் நினைச்சபடி சீவிக்கத் துவங்கினதாலை நாடு முறையா வழிநடத்தப் படேல்லை. பிறகு 2009க்குப் பிறகு, 'நாங்கள்தான் சண்டையை நிப்பாட்டினாங்க.ள் இனி மேல்தான் நாட்டை வடிவா நிர்வகிப்பம்' எண்டு சொல்லிக்கொண்டு வந்தவை கிடக்கிற மிச்ச சொச்சம் எல்லாத்தையும் வித்துச் சுட்டுத் திண்டிட்டுப்போட்டினம்.

அதாலை திடீர் பணக்காரரின்ர தொகை இலங்கைச் சனத்தொகையைவிடக் கூடவாப்போச்சுது.

போனகிழமை பிள்ளையான்ரை சொத்து மதிப்பை ஆரோ முகநூலிலை போட்டிருந்தினம். அது தெரிஞ்ச தொகை.தெரியாமல் எவ்வளவு இருக்கும்...? அப்பிடிக் கருணாவைப் பிடியுங்கோ. அதை போலை போன ஜனாதிபதி எலச்சன் வரை ஆட்சியில் இருந்த ஆக்களின்ரை பிள்ளை, குட்டி, தம்பி, தமையன் அவையின்ரை பெண்சாதிமார், உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அவையின்ரை வீட்டு வேலைக்காரர், றைவர்மார், அவையின்ரை அரசாங்கத்திலை மந்திரிமாராக இருந்தவை சபையளின்ரை சேர்மன்மார் ,அதிகாரியள், அவையின்ரை எடுபிடியள், பினாமியள் எண்டு எல்லாரையும் பிடிச்சு ஒரு உலுப்பு உலுப்புங்கோ...! மாமரத்திலை உலுத்தேக்கை கொட்டுற மாதிரி மாம்பழங்கள் கொட்டு கொட்டெண்டு கொட்டுறமாதிரிக் காசு கொட்டும். அத்தனையும் பறிமுதல் செய்யுங்கோ. அதுக்குப் பிறகு உலக நாணயநிதியத்திட்டை போய் கையேந்தத் தேவை இல்லை. எல்லாம் ஒரு இரவிலை தீர்ந்துபோயிடும்.

நான் இப்பிடி அட்வைஸ் பண்ணுறதாலை தயவுசெய்து மத்திய வங்கி ஆளுநராக இருங்கோ அன்னமுத்து அண்ணை எண்டு கேட்டுப்போடாதையுங்கோ.ஏனெண்டால் உலகத்திலேயே ஈஸியான வேலை மற்றவைக்கு அட்வைஸ் பண்றதுதான். நன்றி

இப்படிக்கு
**அப்பாவி அன்னமுத்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் இயல்பா?



ஒரு சீடன் தன் குருவிடம் "என்னால் எனது கோப இயல்பைக் கட்டுப்படுத்தவே இயலவில்லை" என்று கேட்டான். குரு அவனிடம், "உனது கோபம் எங்கே? எனக்குக் கொஞ்சம் காட்டு" என்றார்.
சீடன் ஆச்சரியப்பட்டான்.
"இப்போதைக்கு என்னிடம் கோபம் இல்லை, அதனால் என்னால் அதைக் காட்ட முடியாது" என்றான்.
அதற்கு "பிரச்சினை ஒன்றும் இல்லை. கோபம் வரும்போது என்னிடம் கொண்டுவந்து காட்டு" என்றார் குரு.
சீடன் கடுப்புடன், "கோபம் வந்தவுடன் என்னால் கொண்டுவந்து உடனடியாகக் காட்டமுடியாதே" என்றான்.
அத்துடன், "எதிர்பாராத வேளையில் கோபம் வரும். அதை நான் உங்களிடம் வந்து காட்டுவதற்குள் நிச்சயமாக மறைந்தே போய்விடும்" என்றான் சீடன். "அப்படியானால் கோபம் என்பது உனது உண்மையான இயல்பாக இருக்கமுடியாது" என்றார் குரு.
நீ பிறக்கும்போது உன்னிடம் அது இல்லை. உனது பெற்றோரும் உன்னிடம் தரவில்லை. அதனால் அது வெளியிலிருந்துதான் வந்திருக்கவேண்டும். எப்போதெல்லாம் கோபம் வருகிறதோ அதை ஒரு குச்சியால் அடித்து விரட்டு" என்றார் குரு.

## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்






## சிறுவர் கைவண்ணம்



ர.சாணக்கியன்
தரம்6A
யா/உடுப்பிட்டி
அ.மி.த. கல்லூரி



உ.ஆருசாந்
தரம் 8c
யா/ வட்டு இந்துக் கல்லூரி




எஸ்.தரேஸ்
தரம் 7C
யா/ இந்துக் கல்லூரி



க.கோபிஷாந்
தரம் 4
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.



**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அ.நிக்ஸன்

# புதிய வகிபாகத்தில் அமெரிக்க – இந்திய உறவு

மீண்டும் அமெரிக்க - இந்திய உறவு மேலோங்கி வருகிறது. 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை டொனால்ட் ட்ரம் ஜனாதிபதியாக இருந்தபோது, நரேந்திரமோடி அமெரிக்காவுடனான உறவை வலுப்படுத்தியிருந்தார். இந்தக் காலப்பகுதியில்தான் அமெரிக்க இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தங்களும் வெவ்வேறு வடிவங்களில் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பின்னணியில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பதவியேற்ற டொனால்ட் ட்ரம், மோடியுடன் மீண்டும் உறவைப் புதுப்பித்திருக்கிறார். உலக அளவில் அமெரிக்கா விதித்துள்ள வரிகள், இந்தியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தாலும் இந்தியாவுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி குறைந்தளவானதுதான்.

இந்தியா மாற்றுத் திட்டங்களை மேற்கொள்வதுடன் அமெரிக்க உற்பத்திப் பொருள்களுக்கும் வரியை அதிகரிக்க முடிவு செய்திருக்கிறது. ஆனாலும் அமெரிக்க இந்திய உறவு ட்ரம்ப்-மோடி என்ற தனிப்பட்ட முறையிலான கூட்டிணைப்பு ஊடாக புதிய வகிபாகம் ஒன்றை உருவாக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. இந்தியா - அமெரிக்காவுடன் உறவை வலுப்படுத்தி வருவதாக அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளியுறவு குழு மூத்த உறுப்பினரான பிராட் சொர்மன் தெரிவித்துள்ளார். அமெரிக்க செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த உறவு தொடர்பாக விபரித்துள்ளார்.

'பிரதமர் மோடி இந்தியாவின் முகம்' என்று வர்ணித்துள்ள பிராட் சொர்மன், மோடியின் ஆட்சியில், இந்தியா குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தை கண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தப் பின்னணியில் இராணுவ உளவுப் பகிர்வு மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட பசுபிக் பகுதியை சுதந்திரமாகவும் அமைதியாகவும் வைத்திருக்க முயற்சி செய்வதில் கவனம் செலுத்துவதன் மூலம், மிகப்பெரிய கூட்டு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகளுடன் பாதுகாப்பு முறைமைகளில் அமெரிக்க இந்திய உறவு வலுவாக இருப்பது தெளிவாகத் தெரிகிறது.

அதேநேரம் 'ட்ரம்ப் விதித்த வரிகளினால் 500 பில்லியன் டொலர் சந்தையை சீனா இழக்கும்போது, மலிவான விலைகளில் தனது உற்பத்திகளை இந்தியச் சந்தைகளில் சீனா குவிப்பதற்கான சாத்தியம் இருப்பதாக' இந்திய உற்பத்தித் துறைத் தலைவர் அஜய் சஹாய் சுட்டிக்காட்டியுள்ளார்.

மலிவான சீனத் தயாரிப்புகள் இந்தியச் சந்தையில் குவிக்கப்பட்டால், அது இந்திய உற்பத்தியாளர்களுக்கு பெரிய பாதிப்பாக அமையும் என்றும், இந்திய நிறுவனங்கள் வலிந்து மலிவாக்கப்பட்ட சீனப் பொருள்களுடன் போட்டியிட முடியாது என்றும் என்றும் அஜய் சஹாய் சுட்டிக்காட்டியுள்ளார். இந்திய உற்பத்தியாளர்களின் நலன்களுக்காக அமெரிக்க வர்த்தகத் துறையுடன் எவ்வாறு கைகோர்ப்பது என்பது குறித்து இந்தியா கவனம் செலுத்தும் என நம்புவதாகவும் அவர் கூறுகிறார்.

அதேவேளை அரசியல், பொருளாதார ரீதியில் அமெரிக்க இந்திய உறவுக்கும் புதிய உடன்பாடுகளுக்கும் ஏற்ப அணுகுமுறைகளை வகுக்கவுள்ளதாக புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகமும் கூறியிருக்கிறது.

அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை புதுடில்லிக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய பாதுகாப்புத் துறையின் உயர் அதிகாரிகள், இந்திய பொருளாதார வல்லுநர்கள் உள்ளிட்ட பலரைச் சந்தித்திருக்கிறார்.

மோடி - ட்ரம்ப் ஆகிய இருவரும் கடந்த பெப்ரவரி மாதம் வொஷிங்டன் நகரில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது, 2030 ஆம் ஆண்டுக்குள் அமெரிக்க இந்திய வர்த்தகத்தை 500 பில்லியன் டொலராக உயர்த்துவதற்குரிய திட்டங்களை வகுத்திருந்ததாக நியுயோர்க் ரைம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் பின்னர் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் அமெரிக்க இந்திய உறவின் முக்கியத்துவம் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பொருளாதார ஒத்துழைப்பு இந்தோ - பசுபிக் பாதுகாப்பு போன்ற விடயங்களில் அமெரிக்க இந்தியச் செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் உற்பத்தி, எரிசக்தி, அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் இராணுவத் துறைகளில் இந்தியா அமெரிக்கா வேகம் காட்டத் தவறினால், அது உலகுக்கே மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற தொனியில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் எச்சரிக்கையுடன் சுட்டிக்காட்டிய விடயம் நியாயமானது என்ற தொனியில், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறியிருக்கிறார். அதாவது குறித்த விடயங்களில் அமெரிக்க இந்தியக் கூட்டுச் செயற்பாட்டின் அவசியத்தை ஜெய்சங்கரும் வலியுறுத்துவதாக பி.பி.சி. உலக செய்திச் சேவை கூறுகிறது.

'இந்திய அதிகாரிகளுடன் இந்தோ - பசிபிக் பிராந்திய பாதுகாப்பு, சீனாவின் செல்வாக்கு, மற்றும் உலகளாவிய வர்த்தகப் பிரச்சினைகள் தொடர்பாக இந்தியாவும் அமெரிக்காவும் குவாட் இராணுவக் கூட்டணியில் இணைந்து எதிர்கொள்ளும்' என்று சென்ற 22 ஆம் திகதி ஜெய்ப்பூரில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் வான்ஸ் உரை நிகழ்த்தியபோது பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். அதாவது இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கு மற்றும் சீன இராணுவ ஆதிக்கங்களைத் தடுக்க அமெரிக்க - இந்திய கூட்டுக்கு அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளும் ஒத்துழைக்கும் என்றும் அவர் விபரித்திருக்கிறார். குவாட் இராணுவ கூட்டு அணியில் இந்த நாடுகள் பிரதான அங்கம் வகிக்கின்றன.

இந்தப் பின்னணியில் அமெரிக்கத் துணை ஜனாதிபதி வான்ஸ் நிகழ்த்திய உரை அமெரிக்க இந்திய ஊடகங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது. இச் சூழலில்தான் அமெரிக்க உறவின் முக்கியத்துவம் தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் கொழும்பில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.வி.பி. எனப்படும் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு முன்னர் அதாவது எதிர்க்கட்சியாக இருந்தபோது அநுரகுமார திஸாநாயக்க அமெரிக்க இந்திய நாடுகளுக்குப் பயணம் செய்தமை பற்றியும், இந்த இரு நாடுகளின் உறவுகள் இலங்கைக்கு முக்கியமானது என்பது தொடர்பாகவும் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார். அதேவேளை அமெரிக்க - இந்திய உறவுகள் பற்றியும் சீனாவோடு பொருளாதார உறவைப் பேணுவது குறித்தும் இலங்கை வெளியுறவு அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

குறிப்பாக அமெரிக்க - இந்திய உறவு தொடர்பாகவும் அந்த உறவுடன் இலங்கை சேர்ந்து பயணிக்க வேண்டிய அவசியம் பற்றியும் ஆராயப்பட்டு வருவதாகக் கொழும்பில் தகவல்கள் கசிந்துள்ளன. அதாவது அமெரிக்காவுடன் இலங்கை நேரடியான உறவைப் பேணுவது அநுரகுமார அரசாங்கத்தின் பிரதான இலக்கு என்பது தெரிகிறது. தற்போது குழப்பமடைந்திருக்கும் சர்வதேச ஒழுங்கு முறைக்குள் இராணுவ மற்றும் பொருளாதார விஸ்தரிப்பு விவகாரங்களில் புதிய உருவெடுக்கும் அமெரிக்க இந்திய உறவுக்குள், தங்கி வாழும் புதிய அரசியல் அணுகுமுறை ஒன்றை அநுர வகுக்கிறார் என்பது சமீபத்திய தகவல்.

காஷ்மீரில் கடந்த வாரம் 20 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் இந்தியா - பாகிஸ்தான் இராஜதந்திர உறவு முறிவு மற்றும் சமீபத்திய புவிசார் அரசியல் சூழல் இலங்கைக்குச் சாதகமான ஒன்றே. ஆகவே ஈழத்தமிழர் விவகாரத்தை சர்வதேச அரங்கில் இருந்து முற்றாக நீக்க வேண்டுமானால், சீனாவை விடவும் அமெரிக்க இந்திய உறவு பாதுகாப்பானது என்ற உணர்வு ராஜபக்ச குடும்பத்துக்கும் இருந்தது. ஏறத்தாழ ஜே.ஆர்., சந்திரிகா கால அணுகுமுறைதான் அது. ஆனால் புதிய அரசியல் கோணத்தில் ஈழத்தமிழர்களின் 'அரசியல் விடுதலை' என்பதன் நியாயப்பாடுகள் அத்தனையும் தேசிய மக்கள் சக்திக்குள் கரைக்கப்படுகின்றன.

அதேவேளை, அமெரிக்கத் துணை ஜனாதிபதியுடன் புதுடில்லிக்குப் பயணம் செய்திருந்த அமெரிக்கப் பாதுகாப்புத் துறையின் மூத்த அதிகாரி மைக்கல் வால்ட்ஸ், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலை சந்தித்துப் பேசியிருக்கிறார். இதன்போது இந்தோ பசுபிக் விவகாரத்தில் அயல் நாடுகளின் பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடர்பாகவும் பேசப்பட்டிருப்பதாக டில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அஜித் டோவால் விரைவில் கொழும்புக்கு வருவார் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன. இந்தநிலையில் ஈழத்தமிழர் விவகாரத்தில் தமக்குச் சாதகமான நிலைகளை ஏற்படுத்துவதற்கு அநுரகுமார அரசாங்கம் அமெரிக்காவுடனான உறவைப் பலப்படுத்துவதையே விரும்பும். அதுவே இப்போது நடந்து கொண்டுமிருக்கிறது.

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்



02

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சிதிட்ட தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை.

பௌத்த தத்துவங்களின் பரவலுக்குப் பின்னராய் தோன்றிய அறம் மற்றும் ஒழுக்கம் குறித்த கருத்துருவாக்கங்களில் பௌத்த தத்துவங்களின் தாக்கம் தவிர்க்கமுடியாததாகும். நெறியியல் என்னும் அதிகாரத்தில் 273ஆவது சுலோகத்தில் மனிதர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கநெறிகளாக நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளந்து, ஓர்தலைப்பாடு போன்ற விடயங்கள் முன்மொழிப்பட்டுள்ளன. இவற்றினைப் பின்பற்றுவதனால் நிர்வாணத்தினை அடையமுடியும் என்கின்றது தம்மபதம். மேலும் மனிதன் துன்பங்களிலிருந்து விடுதலை அடையவேண்டுமாயின் ஆரிய சத்தியம் என்று அழைக்கப்படும் நான்கு அடிப்படைகளான உண்மைகள் முறையே துன்பம், துன்பத்துக்கான காரணம், துக்க நீக்கம், துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான நெறி போன்றவற்றைத் தெரிந்து அதற்கமைவாக வாழ்வதன் மூலம் நிர்வாணத்தை அடைந்துகொள்ளமுடியும் என புத்தர் கூறுகின்றார். அதே வேளை மானிட வாழ்க்கையின் நிலையற்ற தன்மையினை மிகத் தெளிவாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

மனிதன் மரணத்தின்போது எதையும் சுமந்துசெல்ல வல்லவன் அல்லன். ஆதலில் அவன் நிர்வாணத்தினை அடைந்துகொள்வதற்கான வழியினை செம்மைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்றார். இதனையே பட்டினத்தார் மரணத்தின்போது நாம் செய்த பாவ புண்ணியங்கள் மட்டும்தான் எம் இறப்பின்போது எம்மோடு வரும் என்கின்றார்.

***அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே வழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியரு
கைத்தலை மேல்வைத்து அழும் மைந்தரும் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!***

புத்தபகவானின் போதனைகள் மானிடவாழ்வியலை செம்மைப்படுத்துகின்ற ஒழுக்க தத்துவங்களாக உலகமெங்கிலும் கொண்டாடப்படுகின்றன. ஆனால் இலங்கையில் இத்தகைய தன்நிகரற்ற மிக உன்னதனமான பௌத்த தத்துவங்கள் மதம் மற்றும் சிங்களம் என்னும் இன அடையாளத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக அவை பற்றிய தெளிந்த புரிதல் இல்லாமையினால், சமூக - கலாசார புரள்வும் இனங்களுக்கிடையே சுமூகமான உறவுகள் இல்லாமையும் இனமோதல் போன்றவற்றுக்கு அடிப்படையானதாகவுள்ளன. இக்கட்டுரையில் பின்வரும் விடயங்கள் தெளிவாக ஆராயப்படுகின்றன.

## 1.2 பண்டைய தமிழரும் பௌத்தமும்

நீண்டவரலாற்றுமரபுரிமைப்பண்பாட்டுப்பின்னணியினைக் கொண்ட தமிழ்ச்சமூகம் தமது வாழ்க்கைமுறையினை கட்டமைக்கப்பட்ட வாழ்வியல் சித்தாந்தங்களுக்கு அமைவாக வாழ்ந்துகொண்டிருக்கின்றது. உலகின் பண்டைய நாகரிகங்கள் நதிக்கரையோரங்களிலேயே தோற்றம்பெற்றன. ஏனெனில் அங்குதான் நிலைகுடிகள் வாழ்ந்தனர். நைல் நதிப் பள்ளத்தாக்கில்தான் உலகப் புகழ்பெற்ற கிரேக்க நாகரிகம் தோன்றியது. அதேபோன்றுதான் இந்தியாவின் கங்கை நதிக்கரையில் கோசலப் பேரரசும், மகதப்பேரரசும் தோற்றம்பெற்றன. மேலும் தென் இந்தியாவில் காவேரிக் கரையில் தோன்றிய பாண்டியப் பேரரசு தமிழ் மொழியினையும், தமிழர் தம் பண்பாட்டுக் கோலங்களினை பேணிப்பாதுகாத்து வளர்ப்பதிலும் அதிக சிரத்தை எடுத்தது. தமிழர் பண்பாட்டுக் கோலங்களின் நிலைபேண் தன்மைக்கு தமிழகத்தினை ஆட்சிபுரிந்த மூவேந்தர்களும் பங்களிப்புச் செய்தபோதும் பாண்டியர்களின் பங்களிப்பு முதன்மையானதாக விளங்கியது (இலட்சுமணன், 2006).

பண்டைக் காலத்தில் தமிழன் மறப்போருக்கும், வாழ்வியல் இன்பங்களுக்கும், உணர்வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தபோதிலும் வாழ்வியல் நீரோட்டத்தில் ஒவ்வொரு மனிதனும் பின்பற்றவேண்டிய அடிப்படையான ஒழுக்கநெறிமுறைகளிலிருந்து தவறி வாழ்ந்த நிலை காணப்பெற்றது. மேலும் போதைதரும் வஸ்துகளின் பாவனையும், மாதுக்களின் நட்பும், மதுப்பாவனையும் அதிகரித்திருந்தது. ஆடவர்கள் பாலியல் இன்பங்களுக்கும் சிற்றின்பங்களுக்குமாக பரத்தையர்களினை நாடிச்செல்லும்நிலை அதிகமாகக் காணப்பட்டது. மேலும் சாதிப்பாகுபாடுகள், உயிர்வதையுடன் கூடிய வேள்விகள், யாகங்கள், புலால் உண்ணும் பிராமணியத்தின் மேலோங்கியதன்மை போன்றவற்றின் தாக்கம், அதன் விளைவுகள், உலக வாழ்க்கைக்கு இன்பம் தரக்கூடிய விடயங்களிலேயே மக்கள் அதிகம் சிரத்தை உள்ளவர்களாக காணப்பெற்றனர். இந்நிலைப்பாடு அக்காலத்தில் சமூகப் பிறழ்வுகள் ஏற்படுவதற்கு வித்தாயின. இத்தகைய சமூகரீதியான பிறழ்வுகளிலிருந்து விடுபடுவதற்கு தத்துவார்த்த ரீதியான போதனைகளும், ஒழுங்கமைக்கப்பட்ட அற ஒழுக்கங்களின் பிரயோகங்களும் தேவைப்பாடுடையனவாக இருந்தன. (Obermiller, 1999) இவ்வாறான நிலையில் கங்கைக் கரையோரம் தோன்றிய புத்தரின் போதனைகள் கி.பி 3 ம் நூற்றாண்டளவில் தமிழ் நாட்டுக்குள் நுழைந்தன. இதற்கு கிர்ணர் கற்சாசனம் (the Kirnar Stone Inscription) சான்றாகின்றது. இக்கல்வெட்டில் மௌரியர்குல வம்சத்தின் வழித்தோன்றலான அசோகச் சக்கரவர்த்தியினால் கி.மு 3ஆம் நூற்றாண்டில் பிராகிருத மொழியில் கிர்னார் இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டில் பௌத்த மதமானது தமிழ் நாட்டுக்கும் அண்டைய நாடுகளுக்கும் கி.மு 3ஆம் நூற்றாண்டில் பரப்பப்பட்டது என எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு தமிழ் நாட்டுக்குள் பௌத்த கருத்துகள் மிகவேகமாக பரவத்தொடங்கியன. ஏனெனில் அங்கு மேலே குறிப்பிட்டதைப் போன்று சமூகப் பிறழ்வுகளினால் பலவீனப்பட்ட ஒரு சமூகம் காணப்பட்டது. (கலியாணசுந்தரம், 2025).

இறைவழிபாடும், இறைநம்பிக்கையும் ஆதித் தமிழனிடம் காணப்பட்டன. எனினும் சமய சார்புத்தன்மை குறைவாகக் காணப்பட்டது. அவர்களிடம் இறைவழிபாடு மற்றும் நடுகல் வழிபாடுகளும் காணப்பட்டன.

(தொடரும்)

# உளர்ப்தினம்

பாகம் 3

இராகவன்

குப்பிழான் ஐ.சண்முகன் காலமாகி இரண்டு வருஷமாகுது. அதொரு எதிர்பாராத இழப்பு. அவர் எவ்வளவுதான் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்தாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளவே மாட்டார். அதால வெளியாக்களுக்கு அவர் நல்ல தேகாரோக்கியத்தோடு இருப்பதாகவே தோன்றும். நான் கடைசியாக அவரைச் சந்திக்கேக்குள்ளையும் "ஒரு கொத்துக் குளிசையள விழுங்கச் சொல்லித்தந்திருக்கு. சரியான ஆய்க்கினையாக் கிடக்கடாப்பா!" எண்டு தன்ர வழமையான முத்திரைச் சிரிப்போட சொன்னார். அவர் நெடுங்காலமாக இந்த ஆய்க்கினையை அனுபவித்து வந்திருக்கிறார். உடல்நலங் குறித்து அவரிடம் விசாரித்தால் மட்டுமே சாடை மாடையாக ஏதாவது சொல்வார். அவ்வளவுதான்.

எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் தனது தந்தையார் நினைவாக வழங்கிவரும் வீழிசைச் சிவம் விருதுக்கு 2023 காலப்பகுதியில் சண்முகன் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அவ்விருது வழங்கும் விழாவில் பங்கேற்க அவர் தெல்லிப்பழைக்கு மனைவியாருடன் சென்றிருந்தார். அதுவே அவர் இறுதியாகப்பெற்ற விருதாகவும், இறுதியாகக் கலந்துகொண்ட நிகழ்வாகவும் அமைந்துவிட்டது. சண்முகன் உள்ளூரில் நடக்கும் கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு தவறாமல் சமுகமளிக்கின்ற காலமொன்றிருந்தது. அதற்கெல்லாம் அவர் தனது அகன்ற சீற் சைக்கிளில்தான் போவார். வெளியூரில் நடக்கும் கலை இலக்கிய நிகழ்வுகளுக்கு பஸ்ஸில்தான் போவார். குறிப்பாக திரைப்பட விழாக்களுக்கு பஸ்ஸில்தான் போவார். அவருடன் கூடவே நானும் போயிருக்கிறேன். யாழ். பல்கலைக்கழத்தில் நடந்த ஜேர்மன் திரைப்பட விழாவுக்கு நான் அவருடன் சேர்ந்துபோயிருக்கிறேன். இதைத்தவிர யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகினால் மாதாந்தம் திரையிடப்படும் படங்களைப் பார்க்கவும் இருவரும் பஸ்ஸில் போயிருக்கிறோம். அவருடன் சேர்ந்து செல்லும்போது ஒரு திரைப்படத்தை எப்படிப் பார்த்து இரசிக்கவேண்டும் என்ற விளக்கம் எனக்கு தன்னியல்பாகவே கிடைத்திருந்ததை காலப்போக்கில் உணர்ந்துகொண்டேன்.

26

சண்முகனோடு நான் பெரும்பாலும் கட்டைவேலி யூனியன் ஓட்டோவில் போயிருக்கிறேன். அதில் முக்கியமானது காலச்சுவடு ஆசிரியர் கண்ணன் 2002 பிற்பகுதியில் முதன்முதலில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவருடனான சந்திப்பு. அந்தச் சந்திப்பு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. முதலில் நானும் சண்முகனும் பஸ்ஸில் போகவே திட்டமிட்டோம். ஆனால் யூனியன் தலைவர் சிதம்பரப்பிள்ளை, காலச்சுவடு ஆசிரியர் கண்ணனை கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் சார்பில் நெல்லியடிக்கு அழைத்துவர விரும்பினார். அதனால் என்னை அழைத்து, "நீ எங்கடை ஓட்டோவில போய்க் கதைச்சு இங்கை ஒரு நிகழ்ச்சி நடத்த ஒழுங்குசெய்து கொண்டு வா! தேவையெண்டால் சண்முகனையும் கூட்டிக்கொண்டுபோ!" எண்டு சொல்லியனுப்பினார். அந்த ஏற்பாட்டில்தான் நாங்கள் யூனியன் ஓட்டோவில் போனோம். யாழ். பல்கலைக்கழகத்தில் கண்ணனுடனான சந்திப்பு பிற்பகல் வேளையில் நடைபெற்றது. அங்கே ஏற்பாட்டாளர் ஒருவர் கண்ணனுடனிருந்தார். நிகழ்வு முடிய பொழுதுசாய்ந்துவிட்டது. நான் ஏற்பாட்டாளரை அணுகி, வந்த விசயத்தைச் சொன்னேன். அவர் உடனே, "அவருக்கு நேரமில்லை. ஆள் கடும் பிஸி. அவர் வாறது சாத்தியமேயில்லை" எண்டு முகம் முறிக்கிறமாதிரிச் சொல்லிப்போட்டுப்போட்டார். நானும் சண்முகனிட்ட வந்து விசயத்தைச் சொன்னன். "பிறகேன் மினக்கெடுவான் வெளிக்கிடுவம்" எண்டார். நாங்கள் வெளிக்கிட்டுவரேக்குள்ள ஓட்டோ றைவர் ஏதோ அலுவலா ஓட்டோவை நிப்பாட்டினார். அந்த நேரம் தேவதூதன் போல ஒராள் வந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊரைக் காக்கும் மூப்பனார்!

க. சர்மிளா காயத்ரி
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கிராமிய சமூகங்களில் தெய்வங்களும் அவற்றின் வழிபாடுகளும் மக்களின் அன்றாட வாழ்வியலோடு ஆழமாகப் பிணைந்துள்ளன. இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் காணப்படும் கிராமிய தெய்வ வழிபாடுகள் அந்தந்தப் பகுதியின் பண்பாட்டு அடையாளங்களாக விளங்குகின்றன. இவற்றில் மலையகத் தமிழர்களின் மூப்பனார் வழிபாடு ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. தென்னிந்தியாவின் திருச்சி, சேலம், மதுரை, வேலூர் போன்ற பகுதிகளிலிருந்து இலங்கைக்கு வந்த இம் மக்கள் தங்களுடன் கொண்டுவந்த பூர்வீக வழிபாட்டு மரபுகளை இன்றுவரை பாதுகாத்து வருகின்றனர்.

பதுளை மாவட்டத்தின் லுணுகலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள செல்வபுரம் கிராமத்தின் மூப்பனார் தெய்வ வழிபாடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சதுரவடிவில் அமைந்த இக்கோயில் முழுமையாகக் கட்டப்படாமல் பகுதியளவு மதில்களோடு காட்சியளிக்கிறது. "கோயில் முழுவதும் கட்டிமுடிக்கக் கூடாது. அது ஊருக்குச் சரியில்லை" என்ற நம்பிக்கை இங்குள்ள மக்களிடையே வேரூன்றியுள்ளது. கோயிலுக்குள் சுற்றிவர 24 கற்கள் அமைக்கப்பட்டு, மையத்தில் ஒரு பெரிய கல் வைக்கப்பட்டுள்ளது. இக்கற்களையே மூப்பனார் என்ர தெய்வமாகக் கருதி வழிபடும் பழங்கால மரபு இம்மக்களிடையே இன்றும் நிலவுகிறது.

"முதல் காலத்துல இந்தியாவுல புளியங்குறிச்சியிலதான் மூப்பனார் கோயில் இருந்துச்சி. 1926 ஆம் ஆண்டு இலங்கைக்கு வாரப்ப மூப்பனார புடி பண்ணி (பெயர்த்து) இங்க கொண்டுவந்தாச்சு" மூப்பனார் கோயில் செல்வபுர கிராமத்தில் தோன்றிய கதையினை ஊர்வாசியான கே. ஆறுமுகம் குறிப்பிட்டார். இங்கு பூஜை செய்பவர் சேலையால் தனது வாயை கட்டிய பின்பே பூஜைகளை மேற்கொள்வார். பொங்கல் வைத்து 24 தெய்வங்களுக்கும் படையலிட்டு பூஜைகள் ஆரம்பமாகும். மூப்பனார் கோவிலில் ஆடி மாதத்தில்தான் பூஜைகளின் உச்சமான திருவிழா நடக்கும். மூப்பனார் இரவு வேளைகளில் செல்வபுர கிராமத்தை காவல் காப்பதாக ஊர்மக்கள் இன்றளவும் நம்புகின்றனர். " இரவு 12 மணிக்கு வெள்ளைப் பன்றி கட்டத்தை சுத்திபடுத்திருக்கும். அந்த நேரம் தலப்பாக்கட்டி (தலைப்பாகை கட்டி) வளர்த்தியா போவாரு" என்று மூப்பானரின் இரவு நேர உலா வருதலைப் பற்றி மெய்சிலிர்த்தபடி சொல்கிறார் புஷ்பவதி என்ற பெண். இந்தக்கோயிலில் நேர்த்தி வைத்தல் மற்றும் பலி கொடுத்தல் போன்ற சடங்குகள் பிரதான இடத்தைப் பெறுகின்றன.

" சிலர் நேத்தி வப்பாங்க. அந்த நேத்தி சரி வந்தா ஆடு இல்லைன்னா கோழி காவல் கொடுப்பாங்க. பலி கொடுக்குற சடங்க நான் மட்டும்தான் செய்வேன். பிறகு சமைச்ச சாப்பாடு படையல் போட்டு அப்புறம் உதிர சோறு வீசணும்" என்கிறார் மூப்பனார் கோயில் பூசாரியான எஸ்.செல்லமுத்து .

மூப்பனாரை நம்பி ஒரு விடயத்துக்காக நேர்த்திவைத்தால் அது தவறாமல் கைகூடுவதாகவும் இவர்கள் நம்புகின்றனர். மூப்பனாரின் பெருமை செல்வபுரத்தையும் தாண்டி அயல் மாவட்டங்கள் வரையும் பரவியிருக்கிறது. மூப்பானரிடம் தமது மனக்குறைகளைக் கொட்டி, நேர்த்தி வைப்பதற்காகவே வெளியூர்களில் இருந்து ஏராளமானோர் இங்கு வந்து செல்கின்றனர்.

" மூப்பனார் கோயிலுக்கு நேத்தி வச்சி சரியா வந்திருக்கு. என் மாப்பிள்ளை அன்சபா(பக்கவாதம்) நோய் வந்து சுகம் இல்லாமல் இருந்தாரு. அந்த நேரம் மூப்பனாருக்கு நேத்தி வச்சி அப்புறம் அவரு சுகமாகி இப்ப நல்லா நடக்குறாரு. உடனே நாங்க பொங்கல் பூச கொடுத்தோம்" என்று மூப்பானாரின் மகிமையைச் சொன்னார் சாந்தகுமாரி என்னும் பெண். மூப்பனார் மிகவும் சக்தி வாய்ந்தவர் எனவும் ஊரில் களவு, கிண்டல் செய்பவர்களை தண்டிப்பார் என்ற நம்பிக்கையும் கிராம மக்களிடம் ஆழவேரூன்றியுள்ளது. " தப்பு பண்றவங்கள சாமி காட்டித்தான் கொடுக்கும். முதல் வருஷம் நடந்த தப்புக்கு சூடத்தை பத்த வச்சா மறு வருஷம் தப்பு பண்ணின ஆளை மூப்பனார் கோயிலுக்குள்ள விடமாட்டாரு" என்றும் ஊர்மக்கள் சொல்கிறார்கள்.

இன்றும் கிராமியத் தெய்வங்களின் மீதான நம்பிக்கைகள் மக்களிடையே வலுவாக உள்ளன. மூப்பனார் வழிபாடு போன்ற பழங்கால மரபுகள் நவீன காலத்திலும் தங்களின் பண்பாட்டு அடையாளத்தைப் பாதுகாத்துக்கொண்டு, மக்களின் வாழ்வில் ஆன்மீக ஆதரவாக விளங்குகின்றன. கிராமங்களில் வாழும் மக்களின் நம்பிக்கைகளும் வழிபாடுகளும் அவர்களின் பண்பாட்டு வேரோடு இணைந்து வாழும் சக்தியை இத்தகைய வழிபாடுகள் வெளிப்படுத்திநிற்கின்றன.



# பஹல்காம் பயங்கரம்!

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் அனந்நாக் மாவட்டத்தில் உள்ள "இந்தியாவின் சுவிட்சர்லாந்து" என்று அழைக்கப்படும் பஹல்காம் மலைப்பகுதியில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் சர்வதேசரீதியில்கூட பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. பஹல்காம், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிராந்தியத்தைப் பிரிக்கும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் இருந்து சுமார் 200 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர் தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் பொறுப்பேற்றுள்ளது. இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் கனவிலும் நினைத்திராத தண்டனையை அனுபவிப்பார்கள் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எச்சரித்திருக்கும் நிலையில், இந்தியா பாகிஸ்தான் இடையே போர்ப்பதற்றமும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவத்தில் வெளிநாட்டினர் உட்பட 26 பேர் உயிரிழந்துள்ளனர். தங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சியான தருணங்களைக் கொண்டாட வந்தவர்களே உயிரை இழந்திருக்கின்றனர் என்பதுதான் மனதைக் கனக்கவைக்கின்றது. இந்தத் தாக்குதலில் உத்தரப்பிரதேசம், கான்பூரைச் சேர்ந்த சுபம் துவிவேதி என்ற இளைஞரும் உயிரிழந்துள்ளார். இவருக்கு கடந்த பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியே திருமணம் ஆகியிருந்தது. இவர் சிலநாள் விடுமுறையில் தனது மனைவியுடன் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றிருந்தார். துரதிர்ஷ்டவசமாக அவரது பயணம் அவரது இறுதிப் பயணமாக மாறியிருக்கின்றது.

இந்தியக் கடற்படையில் லெப்டினன்ட் அதிகாரியாகப் பணியாற்றிய வினய் நர்வால் திருமணமான ஒரே வாரத்தில், காஷ்மீருக்கு தேன்நிலவு சென்றபோது தாக்குதலாளிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஹரியானாவைச் சேர்ந்த 26 வயதான இவர் கொச்சியில் பணியாற்றுகிறார். இவருக்கும் ஹிமான்சி என்ற பள்ளி ஆசிரியைக்கும் கடந்த 16ஆம் திகதிதான் திருமணம் நடைபெற்றது. தேனிலவுக்கு சுவிட்சர்லாந்து செல்ல இவர்கள் திட்டமிட்டிருந்தனர். விசா கிடைக்க தாமதமானதால் காஷ்மீருக்கு சென்றபோது வினய் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்.


ஷிமோகாவை சேர்ந்த 48 வயதான தொழிலதிபர் மஞ்சுநாத் ராமும் இந்தச் சம்பத்தில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அவரது மகன் 12ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றுச் சித்தியடைந்ததால் அதைக் கொண்டாடுவதற்காக குடும்பமாக அவர் காஷ்மீர் சென்றுள்ளார். அங்கிருந்த தாக்குதலாளியிடம் "என் கணவரைக் கொன்றதை போல என்னையும் சுட்டு கொன்று விடு" என கெஞ்சினேன். அதற்கு அவன், "உன்னைக் கொல்லமாட்டேன். இங்கு நடந்ததை போய் மோடியிடம் சொல்' எனப் பதிலளித்தான் " என்று அந்தக் கொடூர அனுபவத்தைப் பகிர்ந்திருக்கின்றார் மஞ்சுநாத் ராமின் மனைவி.

பிரபல்யம் மிக்க சுற்றுலாத்தலமான ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் மலைப்பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தது. இராணுவ உடை அணிந்து வந்த பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதும், அங்கிருந்த சுற்றுலாப் பயணிகள் தப்பிக்கச் சிதறி ஓடியபோதும், திறந்த வெளி என்பதால் அவர்களால் தப்பிக்கமுடியவில்லை. உயிரைக் காப்பாற்றச் சிதறி ஓடியவர்களை துரத்தித் துரத்தி சுட்டுக்கொன்றுள்ளனர் துப்பாக்கிதாரிகள். பெண்களைத் தவிர்த்து ஆண்களை இலக்கு வைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று கூறியிருக்கின்றனர் சம்பவ இடத்தில் இருந்தவர்கள்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து இந்தியா - பாகிஸ்தான் உறவு மேலும் சிக்கலடைந்திருக்கின்றது. பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு கூட்டத்தில் பாகிஸ்தான் நாட்டவர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கான சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தப்படுகின்றது என்றும் இந்தியா அறிவித்துள்ளது. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் ஒட்டுமொத்தமாக நிறுத்தும்வரை இது தொடரும் என இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்திருக்கின்றார். ஆனால் தன்னிச்சையாக இந்தியா இவ்வாறு முடிவெடுக்க முடியாது என்று பாகிஸ்தானின் வெளியுறவுத்துறை அமைச்சரும், துணைப் பிரதமருமான இஷாக் தர் தெரிவித்திருக்கின்றார். பாகிஸ்தானின் அரசியல் மற்றும் பாதுகாப்பு ஆய்வாளர் ஷாஷாத் சௌத்ரி இதுதொடர்பாக நிகழ்ச்சி ஒன்றில் கூறும்போது, இந்தியா ஓர் அரசியல் முடிவை எடுத்துள்ளது. ஆனால் அதற்கு எந்த விளைவும் இருக்கப்போவதில்லை. ஆனால் இந்தியா இதோடு நிறுத்தி விடாது என்பதை நாங்கள் மனதிற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார். பஹல்காம் தாக்குதல் சம்பவத்தை அடுத்து இந்தியா, பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் துப்பாக்கிச் சண்டைகள் ஏற்பட்டுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பஹல்காம் சம்பவம் ஆளும் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்துக்கு அரசியல் ரீதியான நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதால், கடுமையான பதில் நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடும். தீவிரவாதிகளை இலக்குவைத்து பாகிஸ்தான் எல்லைக்குள் இந்தியா வான்வழித் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடலாம். இந்தியா - பாகிஸ்தான் நுழைவாயிலான வாகா எல்லை உடனடியாக மூடப்படும் என்றும், பாகிஸ்தானில் உள்ள இந்தியர்கள் வெளியேற வேண்டும் என்றும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பதிலடியாகவே பாகிஸ்தான் இந்த முடிவுகளை எடுத்திருக்கின்றது. அதேநேரம் பாகிஸ்தான் வான்பரப்பை இந்திய விமானங்கள் பயன்படுத்த பாகிஸ்தான் தடை விதித்திருக்கின்றது. மறுபுறத்தில் இந்தியாவுடனான ஒப்பந்தங்களை நிறுத்திவைக்கும் உரிமையைப் பயன்படுத்தவும் தீர்மானித்துள்ளது. இந்த நிலைமை இரு நாடுகளின் எல்லைகளில் போர்ப் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதிலி போரின் கவிதை 9



விழித்துக் கிடக்கும் இரவின் மொழிகள்...
பேசமுடியாத மனதின் மூளை...
எழுதத் தெரியாத இதயத்தின் பாஷை
நான் போரின் குழந்தை..!
கர்ப்பவதியாக என் தாய் களத்தில் நின்றாள்
போராட்டம், வேகம், விவேகம்... ரணமாகி...
மூளை செயலிழந்த குழந்தையைப் பிரசவித்தாள்.
சக்கர நாற்காலியில்...அமர்ந்திருக்கும்
உயிருள்ள பொம்மை ஒன்றை இந்தப் போர்
அவளுக்குப் பரிசளித்திருக்கிறது......!
ஆளுமை சேர் மங்கையாக ...
துணிவின் பெயராக அன்று நின்ற அவள்,
இன்று ...எனக்கு சோறுகொடுக்க
வீடு வீடாகச் சென்று....வேலைசெய்கிறாள்
தன் கடந்த காலத்தை வெறுக்கும் அவள்
வாழ விருப்பமின்றி வாழும் ஒரு வரலாறு...
காலை முழுதும் வேலை....
மாலைப்பொழுதில் தேடிய மீதிகளை..
சேர்த்துக்கொண்டு வருவாள்.
என் கழிவுகளைக் கழுவும் போதெல்லம்...
கடந்த காலங்களை எண்ணிக் கலங்குகிறாள்....
என் கடன் பணி...தண்டனையாக
அவளுக்குத் தரப்பட்டதா??
செத்துவிடும் முறை எனக்குத் தெரியாது...
வாழ விருப்பின்றி வருத்த மூட்டைகளை
கட்டிக்கொண்டு வாழும்....
போர் தின்ற மிச்சங்கள்... என் தாயும் நானும்.
அவள் கர்ப்பப்பை...போரின் காற்றை உள்ளிளுத்து....
உயிருள்ள கருவை ஊனமாகப் பிரசவித்தது...
கருவைச் சிதைத்து..
அதுகொடுத்த கணவனைக் கொன்று...
போரின் வெறி..அன்று அடங்கி ஓய்ந்தது...
முடிந்தது போர்....
முடிவில்லா வடுக்கள்..
கர்ப்பப்பையின் காதலுக்காக...
நிர்வாண இரவுகளைக் கடக்கும்
தனிப்பெண் என் தாய்...!
வரலாற்றில் பேசப்படவேண்டிய ஒரு அத்தியாயம்..
நான்கு சுவர்களுக்குள் வதைபட்டுக் கிடக்கிறது....
காலையில் போனால்... மதியம் வருவாள்
சோறு தருவாள் கடமைகள் செய்வாள்..
பாவம் என் தாய்...
தானில்லாப் பொழுதில் காவல் என்று
பக்கத்து வீட்டு" பாரி மகனை...
உத்தமன் என்று உதவிக்கு அழைப்பாள்.
மூளை செத்த மகளை காமத்தின் பசிக்காக
காவு கொள்ளும் "பாரி மகன்
தான் பசித்தபோதெல்லாம்....
ருசி பார்க்கும் வழமை அவள் அறியாள்.
இது வேறு ஒரு காலம் என்பதை
என் தாய் விளங்கிக்கொள்ளவில்லை.....
எடுத்துச் சொல்ல... மொழியில்லா மகள்...
உள்ளுக்குள் அழுவது எவருக்கும் கேட்காது....
கைகளால்...சொல்ல இயக்கமில்லை....
மூளைக்குத் தெரியும்... ஆனால்...எப்படிச்சொல்வது?.....
கத்திப் பார்த்தாலும்....ஒரே சுருதி...
விளங்கமுடியாத கண்ணீர்...அழுதும் பார்த்தாயிற்று
அதுவும் தாய்க்குப் புரியவில்லை.......
அடுத்த போராட்டம்
அவளுக்காகவென தயாரிக்கப்பட்டுள்ளது .
தன் கருக்குழந்தையை
காப்பாற்றத் துடிக்கும் ஒரு ஏழைத்தாயின்
தன்னம்பிக்கையைப் போற்ற
மனமின்றிய ...இந்தக் காலம்........
மனநலம் குன்றிய பெண் பிறவியின்
கருப்பையில்கூட கழிவு கொட்டும்...
காம நோயாளிகளை
ஏன் தன் கைகளில் காப்பாற்றி வைத்திருக்கிறது?
இறைவனே நீ இருந்தால்...
இந்த மனிதர்களை மாற்றி விடு.....
ஒரு சந்ததியின் வாழ்வுக்கு சரித்திரம் எழுதவென..
கொண்டாடிய மக்களை......காலமே கொல்லும்...!
கொடிய வேதனையை வரலாற்றில் எழுதுங்கள்....
அதைப் பார்த்துக்கொள்ள முடியவில்லை....
சப்தமில்லாமல்.....சாகடிக்கப்படும்
போரின் குழந்தைகளை.....மீட்டுக்கொடுக்க
மனிதநேயத்தை ஆயுதமாக எடுங்கள்.
இங்கு நான் மட்டுமல்ல.......
என்னைப்போல.....
நூறு...நூறாயிரம்...குழந்தைகள்
உங்கள்..கண்களுக்குள் அகப்படாமல்....
கவிதை சொல்கின்றன.
கொஞ்சம் செவிமடுங்கள்.....நீங்கள் நினைத்தால்
இவர்கள் வாழ்வை மாற்றிவிடலாம்.

ஆனந்தி


# கற்கண்டு 3 ஓடை

(Cat Gun - -Do or Die)



கதை: இ.சு.முரளிதரன்
வரைகலை - மகேந்திரன் வினித்

திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org